துணைக்கு இலக்கியம்

க்டர் இரா.மோகன்

துணுக்கு இலக்கியம்

அன்புடன்,
இரா. மோகன்
11.4.79

டாக்டர் இரா. மோகன்

சர்வோதய இலக்கியப் பண்ணை

32/1 மேற்கு வெளி வீதி

மதுரை-625001

1979

© உரிமை பதிவு

முதற் பதிப்பு : மார்ச்சு 1979

விலை ரூ. 7-00

பக்கம் : xvi + 108

நிலா வெளியீடு,

மதுரை

அச்சிட்டோர் : சங்கம் பிரிண்டர்ஸ், மதுரை. தொலைபேசி : 31795.

உள்ளுறை

		பக்கம்
	சிலசொல்	vii
	அணிந்துரை	xi
1.	பிள்ளைப் பாசம்	1
2.	பாரதியாரின் சங்கற்பங்கள்	2
3.	உலகப் பழமொழிகள்	3
4.	'பெரிய முட்டாள் தான், ஆனால் சொர்க்கத்தில் அல்ல!'	4
5.	மைத்திரேயி	5
6.	குருநானக்கின் அருள்மொழிகள்	6
7.	'தள்ளாதவன்'	7
8.	'ஆத்மா குளிர்ந்து விட்டதே!'	8
9.	வெளிநாட்டு விடுகதைகள்	9
10.	'நீ அப்படிச் செய்யக் கூடியவள் தான்!'	10
11.	சபாபதி முதலியார் கதை	11
12.	'சிவதனுசை எடுத்து வாருங்கள்!'	12
13.	கண்களுக்குக் காண்டேகரின் நன்றி	13
14.	அறிவுக்கு உணவு	14
15.	திரு. வி. க. இட்ட கட்டளை	15
16.	சிலையும் சிந்தனையும்	16
17.	ஏன் ? ஏன் ?	17
18.	சி. வை. தாமோதரம் பிள்ளையின் வேண்டுகோள்	18
19.	சிந்தனை மலர்கள்	19
20.	'டீயே மதுரம்'	20
21.	'தம்ம பத'த்திலிருந்து . . .	21
22.	'உன்னிடம் இல்லாத ஒன்றே தேவை'	22

23.	மார்க்கஸ் அரேலியஸ் மணிமொழிகள்	23
24.	'வீட்டிற்குள் இருக்கும் விலையுயர்ந்த பொருள்'	24
25.	'காதா சப்த சதி'யிலிருந்து இரு பாடல்கள்	25
26.	டாக்டர் மு. வ. வின் கடிதங்களிலிருந்து . . .	26
27.	ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதை	27
28.	தமிழ் நாட்டுப் பழமொழிகள்	28
29.	சமயோசிதம்	29
30.	சில உவமைகள்	30
31.	'எல்லோரும் இந்நாட்டு மன்னர்'	31
32.	நல்ல சிந்தனைகள்	32
33.	நரியும் காட்டுப் பன்றியும்	33
34.	பழமொழிகளில் பெண்கள்	34
35.	சித்திர மின்னல்கள்	35
36.	கபீர் தாஸரின் சிந்தனைகள்	36
37.	வாலும் தலையும்	37
38.	ராஜாஜி உவமைகள்	38
39.	மணமக்களுக்கு . . .	39
40.	மனிதனைப் பற்றி . . .	40
41.	இப்படியும் ஓர் அறிமுகம்!	41
42.	கெட்டிக்கார ஆடு	42
43.	சிந்தனை மலர்கள்	43
44.	'துன்பம் தீர்ந்தோம்'	44
45.	திரு.வி.க. வின் மணிமொழிகள்	45
46.	இலக்கிய அனுபவம்	46
47.	செட்டிநாட்டுத் தமிழ்	47
48.	சில விடுகதைகள்	48
49.	காதலி இரவில் வராததன் காரணம் . . ?	49
50.	'பெண் மொழிகள்'	50

51.	புதுமைப்பித்தன் உவமைகள்	51
52.	‘நல்ல கேள்விகள்’	52
53	காண்டேகர் மணிமொழிகள்	53
54.	‘எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்’	54
55.	அனுதாபம்	55
56.	‘குருவித் தமிழ்’	56
57.	தவளையின் மௌனம்	57
58.	‘பாதி அடிகள் எனக்கு . . . .’	58
59.	நாட்டுப்புற நம்பிக்கைகள்	59
60.	ரூஸ்ஸோவின் சிந்தனைகள்	60
61.	சில நேரங்களில் சில மாணவர்கள்	61
62.	‘அனற் பிழம்பு’	62
63.	ராஜாஜி மணிமொழிகள்	63
64.	அண்டப் புளுகன்	64
65.	‘தொழிலாளருக்குச் சொந்தமானவை’	66
66.	‘பகவத் கீதை’யிலிருந்து . . .	67
67.	‘சேமச் செப்பு’	68
68.	தாய் தந்தையர் போதித்த நீதிகள்	69
69.	ருஷ்யப் பழமொழிகள்	70
70.	தாகூரின் சிந்தனைகள்	71
71.	போதுமென்ற மனம்	72
72.	தூய வாழ்வு	73
73.	கல்கியின் அறிவுரை	74
74.	சிந்திக்க	75
75.	‘கடிகையாரம்’	76
76.	’புதிய ஏற்பா’ட்டிலிருந்து . . .	77
77.	சில நேரங்களில் சில பதிப்பகத்தார்	78
78.	பெண்களைப் பற்றி . . .	79
79.	‘விடுதலை!’	80

80.	'அவரைக் குறைகூற வில்லையே ...?'	81
81.	ஆல்பர்ட் சுவைட்சரின் விருப்பம்	82
82.	மு.வ.வின் மணிமொழிகள்	83
83.	நெஞ்சை அள்ளும் ஒரு நாட்டுப் பாடல்	84
84.	ஜெயகாந்தன் முன்னுரைகளிலிருந்து......	85
85.	'புதிய ஆத்திசூடி'	87
86.	'பாவம், பெரிய மனிதர்'	88
87.	'மிகச் சிறந்த கதை'	90
88,	'இவள் தான் வீராங்கனை!'	91
89.	மரணம்	92
90.	'ராஜா, நான் போய் வருகிறேன்'	93
91.	கலீல் கிப்ரானின் கருத்துக்கள்	94
92.	'ஒன்னரையணு மதிப்பு'	95
93.	'பஜ கோவிந்த'த்திலிருந்து....	96
94.	'கருவுற்ருர், குழந்தை தான் பெறவில்லை!'	97
95.	நகைத்தல் நல்லது	98
96.	வளையம்	99
97.	'ஏனழுதாய், சொல்லியழு'	100
98.	சில சொற்சித்திரங்கள்	101
99.	ஜெயகாந்தன் சிந்தனைகள்	102
100.	'குழந்தை மொழிகள்'	103
	பெயர் திரல்	104
	மதிப்புரைகள்	106

சில சொல்

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் (Tamil Lexicon) 'துணுக்கு' என்ற சொல்லுக்கு இரு வகையான பொருள்கள் தரப்பட்டுள்ளன: 1. நடுக்கம் (Trembling), அச்சம் (Fear), உள்ளோசை (Vibration). 2. துண்டு (Small piece). 'துணி', 'துணிக்கை', 'துணுக்கை', 'துணியல்', 'துண்டம்' என்னும் சொற்களும் 'சிறு துண்டு' (Piece, bit, fragment, slice) என்னும் பொருளில் வழங்குகின்றன. 'துண்டு துடக்கு' என்பதற்குச் 'சிறு துணுக்கு' என்னும் பொருள் தரப்பட்டுள்ளது.[1]

தமிழ் ஆங்கில அகராதி (Tamil And English Dictionary) 'துணுக்கு' என்ற சொல்லுக்குத் 'துண்டு' (a piece cut off) என்னும் பொருளைத் தருகின்றது.[2]

டச்சு நாட்டு அறிஞர் ஜோல்சு (Jolls) 1930 - இல் ஜெர்மன் மொழியில் 'எளிய வகைகள்' (Simple Forms) என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அவர் குறித்துள்ள ஒன்பது இலக்கிய வகைகளில் விடுகதை, பழமொழி, கட்டுக்கதைகள், வேடிக்கைக் குறிப்புக்கள் என்பனவும் அடங்குகின்றன.[3] எனவே துணுக்கினையும் 'எளிய இலக்கிய வகை,யாகக் கொள்வதிலே தவறேதும் இல்லை. இந்த அடிப்படையிலேயே நூலுக்குத் 'துணுக்கு இலக்கியம்' என்னும் பெயர் இடப்பெற்றுள்ளது.

பத்திரிகை உலகில் துணுக்கு இலக்கியம் நிகழ்த்தியுள்ள தாக்கம் குறிப்பிடத்தக்கது. இன்றைய நிலையில் எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும்--வாரப் பத்திரிகையானாலும் சரி, மாதப் பத்திரிகையானாலும் சரி-அதில் துணுக்குகளே முதன்மை பெற்று விளங்கக் காணலாம். விற்பனையில் உயர்நிலையில் உள்ள பத்திரிகைகளும் இன்று 'துணுக்குப் போட்டி'களை நடத்துகின்றன; 'துணுக்குச் சிறப்பித'ழை

---

1. *Tamil Lexicon, Vol. IV: Part I, pp. 1962 – 1964.*
2. *J.P. Fabricius, Tamil and English Dictionary, p. 536.*
3. மேற்கோள் : தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், ப. 149.

வெளியிடுகின்றன. அவை துணுக்குகளை வெளியிடுவதில் தனிக்கவனம் செலுத்துகின்றன; துணுக்குகளை எழுதி அனுப்புகின்றவர்களின் பெயரைப் போட்டு, துணுக்குகளுக்குத் தக்க தலைப்பினைத் தந்து, துணுக்குகளுக்கு ஏற்ற ஓவியத்தினை வரைந்து வெளியிடுகின்றன. 'துணுக்கு எழுத்தாளர்' என்று சிலரை அறிமுகப்படுத்தவும் செய்கின்றன. எதையும் படிக்கத் தூண்டும் வகையில் துணுக்காக வெளியிடும் போக்கு இன்றைய பத்திரிகை உலகில் மேலோங்கிக் காணப்படுகின்றது.

பரபரப்பும் நெருக்கடியும் மிக்க இன்றைய 'அவசர யுக'த்தில் பெரும்பாலான வாசகர்கள் பத்திரிகைகளை வாங்கியதும் படிப்பது துணுக்குகளைத் தான். சிறுசிறு துணுக்குகளைப் படிப்பதற்கே இன்றைய வாசகருக்கு நேரமும் ஓய்வும் கிடைக்கின்றன. எனவே துணுக்குகள் இன்றைய பத்திரிகைகளில் செல்வாக்கோடு விளங்குவதில் வியப்பில்லை.

'படிப்பதற்கு இனியதாகும் தன்மை' (Readability) துணுக்கில் சிறப்பாகக் காணப்படுகின்றது. இப் பண்பும் துணுக்கு இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இறுதியாக, நூலைப் பற்றிச் சில வரிகள்: நூறு துணுக்குகளைத் தொகுத்துத் தந்துள்ளேன். ஏழு ஆண்டுகளாக அவ்வப்போது தொகுத்து வந்தவை இவை. இவற்றுள் சில 'ஆனந்த விகடன்,' 'கல்கி', 'குமுதம்' இதழ்களில் என் பெயரில் வெளிவந்துள்ளன. அவற்றை வெளியிட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியுடையேன். நூலை ஊன்றிப் படிப்போர் ஒரு சிறந்த துணுக்கிற்கு எதுவும் — நூல்கள், சொற்பொழிவுகள், கடிதங்கள், நாட்குறிப்புகள், பத்திரிகைச் செய்திகள், விளம்பரங்கள், உரையாடல்கள் போன்றவை எவையும்-பொருளாகலாம் என்ற உண்மையினை உணர முடியும். கவனமும் கூர்பார்வையும் இருந்தால் எங்கும், எப்போதும், எதிலும் சிறந்த துணுக்கினை நம்மால் கண்டுகொள்ள முடியும்.

'துணுக்கு இலக்கியம்' என்ற தலைப்பைச் சொன்னதுமே, தலைப்பு தமக்கு மிகவும் பிடித்திருப்பதாகக் கூறினார் டாக்டர்

தமிழண்ணல், தமக்கே உரிய முறையில் ஓர் அணிந்துரை வழங்கி நூலை அணி பெறச் செய்த அன்னோர்க்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

நூல் முயற்சியை வரவேற்று ஊக்கம் அளித்த நண்பர்கள் மா.வண்ணமுத்து, எம்.ஏ., சபா. அருணாசலம் எம்.ஏ., ஆகிய இருவருக்கும், நூலை அழகுற உருவாக்கிய சங்கம் பிரிண்டர்ஸுக்கும் என் நன்றி உரியதாகும்.

மதுரை-21
1.3.79

இரா. மோகன்

அணிந்துரை

அண்மைக் காலமாகத் தமிழ் இதழ்கள் துணுக்குகளை மிக அதிக-மாகவே வெளியிடத் தொடங்கியுள்ளன. நகைச்சுவைத் துணுக்கு-களைத் தமிழில் மிகுதியாக வெளியிட்டு, அத்துறையில் தனக்கென ஒரு சிறப்புப் பாணியை உருவாக்கிய 'ஆனந்தவிகடன்', 'துணுக்குச் சிறப்-பிதழ்கள்' சிலவற்றை வெளியிட்டதும், சிறந்த துணுக்குகளுக்கு மிகுந்த பரிசில்களை வழங்கியதும் இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

உலக இதழ்கள் பலவும் துணுக்குகளைப் பக்கத்திற்குப் பக்கம் வெளியிட்டு, அதன் மூலம் ஓர் ஆர்வத் தூண்டுதலை ஏற்படுத்தவே செய்கின்றன. தமிழ் இதழ்கள் அதற்குப் பின்னடைந்து விடவில்லை-யென்றாலும், தமிழ் இதழ்களில் வரும் பல துணுக்குகள் அவ்வுலக ஏடு-களிலிருந்து எடுக்கப்பட்டவையே என்பதை 'ஆதாரம்' என நன்றி-யோடும், அஃதின்றியும் அவற்றைத் திரும்ப வெளியிடும் நம் இதழ்-களின் மூலம் அறியலாம்.

தமிழ் வார, மாத இதழ்கள் பல தோன்றிப் புதிய வளர்ச்சி காணவும் இருக்கும் செல்வாக்கை நிலைபெறுத்திக்கொள்ளவும் கடுமை-யாகப் போட்டியிட்டுப் பணிசெய்யும் காலம் இது. இப்போட்டியில் அவைகள் கட்டுரை, கதை, புதினங்களில் காட்டும் அக்கறையை விடத் துணுக்குகளை வெளியிடுவதிலேயே பல புதுமைகளையும் மாற்றங்களை-யும் செய்து, அத்துறையில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. இதி-லிருந்து வாசகர்களைக் கவர்வதற்கு இவ் இதழ்கள் பயன்படுத்தும் உத்திகளை நாம் வரிசைப்படுத்தினால் துணுக்கு, சினிமாச் செய்திகள், தொடர்கதைகள், சிறுகதைகள், பயணக் கட்டுரைகள், கட்டுரைகள், கவிதைகள், தலையங்கங்கள் என்றுதான் வரிசைப்படுத்த வேண்டியிருக்-கும். அந்த அளவிற்கு மிகச்சிறிய அளவினவாகிய துணுக்குகளே மிகப் பெரிய, முதன்மை இடத்தை இன்று பிடித்துக் கொண்டிருக்கின்-றன எனலாம்.

துணுக்குகள் இந்த அளவு சிறப்படையக் காரணம் என்ன? இன்றைய உலகம் எந்திர உலகம்; தொழில் உலகம்; எதிலும் விரைந்து செயலாற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் விரைவுலகம். இந்த அவசர யுகத்தில் நீள எழுதி, பல பக்கங்கள் நீட்டி முழக்கிக் கொண்டி-ருந்தால் படிப்பவர் எவருமிலர். சுருக்கமாக, மிகச் சுருக்கமாக எதை-யும் முக்கிய கருத்தை மட்டும் சுட்டி எழுத வேண்டியிருக்கிறது.

கட்டுரைகள் இன்று அளவிற் சுருங்கிவிட்டன. சிறுகதைகளிற் கூட ஒரு பக்க, அல்லது இரண்டு மூன்று பக்கச் சின்னஞ்சிறுகதைகள் எனக் குறிப்பிட்டு எழுதி வெளியிடப்படுவதைக் காண்கிறோம். அரை அரைப் பக்கமாக மாதந்தோறும் தொடர்ச்சித்திரங்களை, சுவையான நிகழ்ச்சிகளை எழுதிவரக் காண்கிறோம். வானொலியிற்கூட முன்பு பதினைந்து மணித்துளிகள் குறைந்த அளவு பேச்சு நேரமாக இருந்தது, இன்று ஏழு எட்டு மணித்துளிகளுக்குள் மட்டுமே அமையக் காண்கிறோம். இவற்றிலிருந்து இன்றைய மக்கள் 'வழவழா' என்று வளைத்து இழுத்து எழுதிப் போவதை முற்றிலும் விரும்பவில்லை என்பது தெற்றெனப் புலனாகிறது. முன்னுரை, சார்புரை, முடிவுரை, நன்றியுரைக்கெல்லாம் இன்றையவுலகம் காத்திருக்க விரும்பவில்லை; சொல்ல வந்த உரையை உடனே, சுருக்கமாக, மனத்திற் பதியக் கூறிவிடுகிறோமா என்பதையே எதிர்பார்க்கிறது.

பெரும்பாலானவர்கள் இன்று பத்திரிகையை வாங்கியதும், இதழ்களைக் கண்டதும் படங்களைப் பார்க்கிறார்கள்; துணுக்குகளைப்படிக்கிறார்கள். பிறவற்றின் தலைப்புகளை மட்டும் படித்துவிட்டுப் பிறகு நேரம் கிடைக்கும் போது அவற்றைப் படித்துக்கொள்ளலாம் என்று அப்புதிய இதழ்களைப் பார்க்கத் துடிக்கும் மற்றவர்களிடம் நீட்டிவிடுகிறார்கள் அல்லது அவற்றை மேசை மேல் வைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள்.

ஒரு இதழில் எவ்வெப் பகுதியை எத்தனை பேர் படிக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் எடுத்தால், துணுக்குகளைப் படிப்பவர் தொகை பலநூறாயிரமாக இருக்கும். சிறுகதை படிப்பவர் தொகை பல்லாயிரமாக இருக்கும். நெடுங்கதை படிப்பவர்கள், கட்டுரை படிப்பவர்கள், தலையங்கம் பார்ப்பவர்கள் என எண்ணிப் பார்த்தால், படிப்பவர் தொகை வரவரக் குறைந்து கொண்டே வரும். எனவே ஓர் இன்றியமையாச் செய்தியைப் பல்லாயிரம் மக்கள் ஒரு சேரப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என ஒருவர் நினைத்தால் அதை அவர் கட்டுரை, கதையாகத் தருவதைவிடத் துணுக்காகத் தந்தால் எதிர்பார்க்குமளவு பெருந்தொகையினரை அதைப் படிக்க வைக்க முடியும். இவ்வாறு துணுக்கு முக்கியத்துவம் அடைந்துவிட்டது.

துணுக்குகளின் வளர்ச்சியும் வகையும் பரப்பும் ஆழமும் பயனும்கூடக் கணிக்கத் தக்கன. ஆண்டுக்கு ஆண்டு, இதழுக்கு இதழ் துணுக்குகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. நகைச்-

சுவைத் துணுக்குகள், கருத்துத் துணுக்குகள் எனவும், திரைப்படத் துணுக்குகள் அரசியல் துணுக்குகள் எனவும் இவற்றை வகைப்படுத்தலாம் படம் போட்ட துணுக்குகள், படமில்லாத் துணுக்குகள் என்பதும் ஒரு பெரும்பிரிவே. வரலாற்றுத் துணுக்கு, இலக்கியத் துணுக்கு, அனுபவத் துணுக்கு, அறவுரைத் துணுக்கு என இவை பல நூறு வகையாய் விரிந்து செல்லும். திரைப்படத் துணுக்குகளுக்குச் செல்வாக்கு அதிகம். 'என் வாழ்வில் நடந்த அற்புதம்' என்பது போல், தனிமனித அனுபவங்களை உணர்த்துவன ஒரு வகை. சில வகைத் துணுக்குகள் சிறந்த தொகுப்புகளாகும்: பழமொழித் துணுக்குகள் பெரியோர் அருள்வாக்குத் துணுக்குகள், சில குறிப்பிட்ட சிறந்த நூல்களிலிருந்து தேடிச் சேர்த்த துணுக்குகள், மொழிபெயர்ப்புத் துணுக்குகள், சிறந்த பெரும் பேரறிஞர்களின் நூல்களிலிருந்தோ, வாய்மொழிப் பேச்சுக்களிலிருந்தோ எடுத்துத் தருவன என இவற்றின் வகை இன்று பரந்துபட்டுச் செல்கிறது. ஒரு துணுக்கை ஒரு பக்கம் முழுவதும் போடுவது; பல துணுக்குகளை ஒரே பக்கத்திற் போடுவது; ஆங்காங்கு பக்கங்களின் மூலை முடுக்குகளிற் போடுவது தலைமையிடம் தந்து மேற்புறத்தில் போடுவது எனப் பலவாறு இவை வெளியிடப்படுகின்றன.

சில துணுக்குகள் தரம் மிக்கன; கருத்தாழம் உடையன. ஒரே துணுக்காயினும், திருக்குறளைப் படித்துப் பயன் கொள்ளுவது போலப் பல தடவை படிக்கத் தூண்டுவன. மிக அரிய செய்திகள், நம் நாட்டுப் பொதுமக்கள் எளிதில் கிடைத்து அறிந்து கொள்ள முடியாதன எனப் பலவற்றைத் தேடித் தொகுத்துத் தருவதால், இவை இலக்கியத் தரத்தை அடைந்துவிட்டன. மேலும் இதுகாறும் துணுக்குகளுக்கு, அவற்றை எழுதிய அல்லது தொகுத்த ஆசிரியர் பெயர் சுட்டப்படுவதில்லை. இன்று ஒவ்வொரு துணுக்கும் அதனை எழுதிய ஆசிரியர் பெயராலும், தலைப்பிட்டும், படம் போட்டும், கட்டம் கட்டியும் வெளியிடப்படுகின்றன. பிறவற்றிற்கில்லாத முதன்மை இடத்தையும், தரம் காரணமாக இலக்கியத் தகுதியையும் இவை பெற்றுவிட்டன. இன்று துணுக்கு இலக்கியத்திற்கெனத் தனிநடை பின்பற்றப்படுகிறது. திருவள்ளுவர் 'குறள்' பா வடிவத்தில் எழுதியிருந்ததனல் அதற்கெனச் சில சொல்லாட்சிகளை, பா நடைகளை, இலக்கண வழுவமைதிகளைக் கைக்கொள்ள நேர்ந்ததன்றே? அதுபோல, பரந்து விரிந்த செய்திகளை மிகச் சுருக்கமாகத் துணுக்காகப் போடவேண்டும் என்பதால் சொல்லாட்சி, நடை, அமைப்பிலெல்லாம் சில புதிய பாணிகளை இன்று இதழ்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டன.

அதே நேரத்தில் சிறிதும் சுவையற்ற, யாருக்கும் பயனற்ற துணுக்குகளை மட்டுமே அழகாகப் பதிப்பித்து வெளியிடுகின்றன, சில தமிழ் இதழ்கள். ஒரு சிலரின் வேண்டாத வாழ்க்கைக் குறிப்பையோ, நிகழ்ச்சியையோ வெளியிட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்நாளை வீணாளாக்க அவை இடம் தருகின்றன. கட்டம் கட்டிப் போட்டுவிட்டால் துணுக்காகி விடாது என்பதை அவர்கள் உணர வேண்டும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல், ஓர் இதழின் தரத்தை அதில் வெளிவரும் துணுக்கொன்றை வைத்தே மதிப்பிட்டு விடலாம். அதன் ஆசிரியர் திறமையும் அதிற்புலனாகி விடும்.

இன்று புதுக்கவிதையும், துணுக்கு இலக்கியமுமே மிகச்சுருங்கிய அளவினவாகிய இலக்கிய வகைகள் எனலாம். இத் துணுக்கு இலக்கியத்தின் வளர்ச்சியைக் கண்ட டாக்டர் இரா. மோகன், அதன்பால் ஈடுபாடு கொண்டு, நம் தமிழ் இதழ்களில் பல துணுக்குகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். சிறுகதை ஆய்வில் ‘டாக்டர்’ பட்டம் பெற்ற இவர் சின்னஞ்சிறு துணுக்கு இலக்கிய வடிவத்தில் ஆர்வம் கொண்டது இயல்பேயாகும். கடந்த சில ஆண்டுகளாக வெளிவந்த கல்கி, விகடன், குமுதம், குங்குமம் போன்ற இதழ்களை நீங்கள் புரட்டினால் அவற்றில் ஏதேனும் ஒரு பக்கத்தில் டாக்டர் இரா. மோகன் அல்லது இரா. மோகன் என்ற பெயர்களில் ஒரு பேராசிரியர் ஒளிந்திருக்கக் காணலாம். எந்நூல்களிலிருந்து அவர் கருத்துக்களை எடுத்துத்‘துண்டு துணுக்குகளாகத்’ தருகிறார்? எத்தகைய செய்திகளைத் தருகிறார்? என்பன ஒரு சுவையான ஆராய்ச்சி. இன்று கிடைக்காத நூல்கள், மிக அரிதிற் பார்க்கக் கூடிய நூல்கள் போன்றவற்றிலிருந்து சுவையான, அரிய, பயனுள்ள செய்திகளை இவர் திரட்டித் தருகிறார். நாம் அடிக்கடி பார்க்கும் நூலிலிருந்தும் கூட, நம் மனத்தைக் கவரும்படியான ஆனால் வேகத்தில் நாம் விட்டுவிட்ட, ஒன்றிரண்டு செய்திகளைத் துண்டுதுணுக்காக எடுத்துச் சட்டம் போட்டுப் பட்டை தீட்டிக் காட்டி நம்மைத் திகைக்க வைக்கின்றார். ‘துணுக்கு’ என்பதற்குத் ‘துண்டு துண்டான’ என்பது மட்டுமன்றித் ‘திகைப்பு’ எனவும் பொருளுண்டன்றோ? இங்ஙனம் துணுக்கு இலக்கியக் கலையில் கைவல்ல அவரை ஏன் இன்றைய இதழ் உலகின் ‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி’ என்று கூறக் கூடாது?

இத் ‘துணுக்கு இலக்கியம்’ இக் கலையின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், டாக்டர் இரா. மோகனின் திறமைக்குத் தக்க

சான்றாகவும் வெளிவருகிறது. பக்கத்திற்குப் பக்கம் நம் உள்ளத்தைக் கவரும் செய்திகள், கருத்துக் கருவூலங்கள், அடிமனத்தில் பதித்துக் கொள்ள வேண்டிய ஆழமான உண்மைகள் இந்நூலில் உள்ளன. நம் முன்னோர்கள் 'தொகை நூல்கள்' பல கண்ட சான்றோர்கள். அவர்கள் 'களிற்றியானை நிரை' என்றும், 'மணிமிடை பவளம்' என்றும், 'நித்திலக் கோவை' என்றும் எத்தனை அழகழகான பெயர்களை அத்தொகைநூல்களுக்குச் சூட்டினார்கள்!

இவ்வாறு போற்றத்தக்க பல துணுக்கு இலக்கியங்களும் துணுக்குத் தொகைகளும் வெளி வருவது, அறிவுலகப் பயணத்திற்கு அருந்துணையாவனவே' அவ் வகையில் இத்துணுக்கு இலக்கியத்தைப் படித்துப் படித்துப் பாராட்டிப் பாராட்டிப் பயன்கொண்ட நண்பர்களுடன் சேர்ந்து நானும் டாக்டர் இரா. மோகனை வாழ்த்துகிறேன். ஒரு கலையில் ஒருவர் ஈடுபடுவதன்று சிறப்பு; அக் கலையின் ஆழமும் நுட்பமும் ஒட்பமும் அறிந்து அது வளரும் வகையில் அதில் ஈடுபடுவதே சிறப்பு. அச் சிறப்பு டாக்டர் மோகனிடமும் இருக்கிறது; அவர் தொகுத்த இத் துணுக்கு இலக்கியத்திலும் நிறையவே இருக்கிறது!

'ஏரகம்'
சதாசிவ நகர்
மதுரை-20

தமிழண்ணல்
2.73.9

துணுக்கு இலக்கியத்தை

வளர்த்து வரும்

பத்திரிகைகளுக்கு

1. பிள்ளைப் பாசம்

நல்ல கடுமையான வெயில். மகன் விறகு கீறிக் கொண்டிருந்தான். அவனுடைய அம்மா தன்னுடைய பேரனை இடுப்பில் வைத்துக் கொண்டு தனது மகன் விறகு கீறிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். நிற்கக் கூட அங்கே நிழல் இல்லை.

அவனுடைய குழந்தையைத் தன்னுடைய அம்மா இப்படி வெயிலில் வைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்த அவன், 'அம்மா, பிள்ளையை இப்படி வெயிலில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறாயே' என்று கடிந்து கொண்டான்.

அவள், 'மகனே, வெயிலில் இப்படி நீ கஷ்டப்படுவது தான் என் கண்ணுக்குத் தெரிந்தது; உன் பிள்ளையை வெயிலில் நான் வைத்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியவில்லை. அது உன் கண்ணுக்குத் தான் தெரிந்தது' என்று சொன்னாள்.

மகன் கோடாரியைக் கீழே போட்டுவிட்டு, 'சரி வா, போவோம்; பொழுது சாயவிட்டு வந்து விறகு கீறலாம்' என்று நடந்தான்.

அவனைத் தொடர்ந்து சென்ற அவனுடைய தாய் தன் பேரக் குழந்தைக்குப் பிரியமாக ஒரு முத்தம் கொடுத்தாள்!

— கி. ராஜநாராயணன் தொகுத்துள்ள 'தமிழ் நாட்டுக் கிராமியக் கதைகள்' என்னும் நூலிலிருந்து

2. பாரதியாரின் சங்கற்பங்கள்

''பொழுது வீணே கழிய இடங்கொடேன். லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்ருலும், இயன்ற வரை சலிப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

மறைத்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங்கொடேன்.

ஸர்வ சக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் என்னுள்ளே புகச் செய்து, எனது தொழில்களெல்லாம் தேவர்களின் தொழில் போல் இயலுமாறு சூழ்வேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு இவற்ருல் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.

இடையருத தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இயலாவிடின் விதி வசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம் இவற்ருேடிருப்பேன்.''

—'மகாகவி பாரதியார் கதைக'ளிலிருந்து

3. உலகப் பழமொழிகள்

○ கடவுள் அடிக்கடி நம்மிடம் வருகிறார்; ஆனால் பெரும்பாலும் அந்த நேரங்களில் நாம் வீட்டில் இருப்பதில்லை.

— ஃபிரான்ஸ்

○ ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு வீடாவது கட்டியிருக்க வேண்டும், ஒரு மகனையாவது பெற்றிருக்க வேண்டும், அல்லது ஒரு நூலாவது எழுதியிருக்க வேண்டும்.

— இத்தாலி

○ நாம் அழுதுகொண்டே பிறக்கிறோம், குறை சொல்லிக் கொண்டே வாழ்கிறோம், ஏமாற்றமடைந்து இறக்கிறோம்.

—இங்கிலாந்து

○ பணத்திற்காகத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம்; பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும்.

—ஸ்காட்லந்து

○ கண்ணீரை விட விரைவில் காய்வது எதுவுமில்லை.

—லத்தீன்

○ ஏழைகள் உணவைத் தேடுகின்றனர்; செல்வர் பசியைத் தேடுகின்றனர்.

— இந்தியா

○ மனிதன் வெற்றியிலே கற்பது சொற்பம்; தோல்வியிலே கற்பது அதிகம்.

—ஜப்பான்

○ ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கிலும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம்.

—செர்பியா

—ப. ராமஸ்வாமி தொகுத்துள்ள
'உலகப் பழமொழிகள்' என்ற நூலிலிருந்து

4. 'பெரிய முட்டாள்தான், ஆனால் சொர்க்கத்தில் அல்ல'!

ஆல்பர்ட் சுவைட்சர் லாம்பரீனில் தம் மருத்துவப் பணியைத் தொடங்கிய போது ஆப்பிரிக்க மக்கள் அவருக்குக் கொடுத்த தொல்லை-கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றால் சோர்வுற்ற சுவைட்சர் ஒரு முறை தமக்குள் புலம்பிக் கொண்டாராம்: ''இப்படிப்பட்ட காட்டுமிராண்டி-களுக்கு இடையே டாக்டராகத் தொண்டாற்ற வந்த நான் எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்திருக்க வேண்டும்!''

அதைக் கேட்ட அவரது உதவியாளரான ஜோசப் என்ற ஆப்பிரிக்கர் கூறினாராம்: ''ஆம், இந்த மண்ணுலகத்தில் நீங்கள் பெரிய முட்டாள் தான், ஆனால் சொர்க்கத்தில் அல்ல.''

—வெர்னர் பிஷ்ட் எழுதிய
'ஆல்பர்ட் சுவைட்சர்' என்ற நூலிலிருந்து

5. மைத்திரேயி

யாக்ஞவல்கியர் இல்லறம் முடித்து விட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்த சமயம், தம் மனைவிகள் இருவரில், பரம்பொருள் விஷயத்தில் அறிவு பெற்றிருந்த மைத்திரேயியைக் கூப்பிட்டு, ''மைத்திரேயி, நான் வனம் போக விரும்புவது உனக்குத் தெரியுமே; உனக்கும் காத்யாயனிக்கும் தகுந்த ஏற்பாடு செய்து விடுதல் நலமல்லவா?'' என்றார். அதைக் கேட்ட மைத்திரேயி, ''பகவானே, இந்தப் புவி முழுதும் சகல சம்பத்துகளும் நிறைத்து நீர் எனக்குத் தந்தால், அதைக் கொண்டு நான் இறவாமை அடைவேனோ?'' என்றாள்.

யாக்ஞவல்கியர், ''எவ்வாறு அது முடியும்? செல்வத்தினால் என்ன சுகங்கள் அடையலாமோ, அவற்றையெல்லாம் நீயும் அடையலாம்; அமிருதத்துவம் எதிர்பார்த்தல் கூடாது'' என்றார்.

''ஐயனே, முக்தி தராத செல்வத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்? தாங்கள் வனம் போகுமுன் எனக்கு அறிவு உபதேசித்தருள்வீர்களாக; அதைத்தான் விரும்புகிறேன்'' என்றாள்.

யாக்ஞவல்கியர் மனம் பூரித்து, ''பிரியே, என் அன்பைப் பெருக்கினாய். வா, உட்காரு; நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். கணவனைக் காதலிக்கிறாள் மனைவி. அந்த அன்பின் பயன் என்னவென்று எண்ணுகிறாய்? கணவனை விரும்புவதன்று. அவனுள் நிற்கும் மெய்ப்பொருளை விரும்பப் பயிலுவதே'' என்று தொடங்கி உபதேசிக்கலானார்.

— ராஜாஜியின் 'உபநிஷதப் பலகணி' என்னும் நூலிலிருந்து

6. குருநானக்கின் அருள்மொழிகள்

○ உள்ளத்திலும் உரையாடலிலும் சத்தியம் குடி கொண்டால், சத்தியத்தின் முத்திரை படிந்தால், வாழ்க்கையில் எதிர்ப்படும் இடர்கள் அனைத்தும் அகலும்.

○ மனத்தை வென்றால், உலகில் எல்லாவற்றையும் வெல்லலாம்.

○ ஒவ்வொருவனும் பிறர் தங்களிடம் பணிவோடு நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான்; தான் பிறர்க்குப் பணிய விரும்புவதில்லை.

○ எங்கே பேசிப் பயனில்லையோ, தோல்வி தான் கிட்டுமோ, அங்கு பேசாதிருப்பதே மேல்.

○ ஒவ்வொருவனும் தன்னைப் பரிபூரணனாகக் கருதிக் கொள்கிறான். தன் குறைபாடுகளைக் கணிப்பதுமில்லை; கவலைப்படுவதுமில்லை.

○ எல்லாம் இறைவன் திருவுள்ளப்படி நடக்கிறது. மனிதன் வசத்தில் என்ன இருக்கிறது?

○ பிறப்பெடுத்தவர்களுக்கெல்லாம் உரிய செயல்கள் முன்பே தீர்மானிக்கப்பட்டுள்ளன. அவரவர் புரிந்த செயல்களுக்கேற்பவே பிரதிபலன்கள் அமையும்.

○ உள்ளும் புறமும் ஒன்றாக வாழ்பவனே மாயை நீங்கிய இறைவனின் உறைவிடத்தை உணர்கிறான்.

— 'குருநானக் அருள்வாக்கு' என்ற நூலிலிருந்து

7. 'தள்ளாதவன்'

கி. வா. ஜ. வும் அவர் நண்பர்களும் ஒரு காரில் போய்க் கொண்டிருந்தார்கள். இடைவழியில் கார் நின்று விட்டது. டிரைவர் என்ன என்னவோ செய்தார்; வண்டி நகரவில்லை. ''சரி, இறங்கி ஒரு கை தள்ளுங்கள்'' என்றார். எல்லோரும் இறங்கித் தள்ளலானார்கள். கி. வா. ஜ. வும் தள்ளப் போனபோது ''நீங்கள் சும்மா இருங்கள்'' என்று காருக்கு உடையவர் சொன்னார். ''ஏன்? நான் தள்ளாதவன் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டார் கி. வா.ஜ. (தள்ளாதவன்—தள்ளுவதைச் செய்யாதவன், தளர்ந்தவன்.)

— கி. இராம சுப்பிரமணியன் தொகுத்துள்ள
'கி. வா. ஜ.வின் சிலேடைகள்' என்ற நூலிலிருந்து

8. 'ஆத்மா குளிர்ந்து விட்டதே!'

ஒருநாள் புதுமைப்பித்தனும் சில நண்பர்களும் ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடச் சென்றார்கள்.

''என்னப்பா, சூடாக இருக்கிறது?'' என்று சேர்வரைக் கேட்டார் புதுமைப்பித்தன்.

''இட்லி.''

''சரி, கொண்டுவா.''

சேர்வர் இட்லியைக் கொண்டு வந்தான்; ஆவி வந்து கொண்டிருக்கும் சூடான சாம்பார் தட்டு நிறைய நிரம்பியிருந்தது. புதுமைப்பித்தன் இட்லியைப் பிட்டார். அது ஆறிப்போன இட்லி. கொதிக்கிற சாம்பாரை அதன் மீது ஊற்றி அதற்குச் சூடேற்றும் வியாபார தந்திரத்தைக் கண்டுவிட்டார் புதுமைப்பித்தன்.

உடனே சேர்வரைக் கூப்பிட்டார்.

''என்னப்பா, ஆத்மா குளிர்ந்து விட்டதே!'' என்றார்.

சேர்வர் விழித்தான். ''இல்லே. சாம்பார் தான் சுடுகிறது இட்லி செத்துப் போச்சே!'' என்று அதற்கு விளக்கம் கூறினர் புதுமைப்பித்தன்.

—ரகுநாதன் எழுதிய 'புதுமைப்பித்தன் வரலாறு' என்னும் நூலிலிருந்து

9. வெளிநாட்டு விடுகதைகள்

1. உனக்குச் சொந்தமான பொருள் ;
ஆனால்,
உன்னை விட் அதிகமாய்
உபயோகிப்பார் மற்றவர்கள். (கனடா)

2. ஆயிரம் பேர் அணி வகுப்பர் ;
ஆனாலும் தூசி கிளம்பாது. (ஸ்பெயின்)

3. பகலெல்லாம் ஊரைச் சுற்றுவான் ;
இரவில்
கதவோரமாய்க் காத்துக் கிடப்பான். (ஈரான்)

4. கறுப்புத் தொப்பி அணிந்த
கனவான் — அவர் யார் ? (இலங்கை)

5. அங்குல மாட்டுக்கு
அரை மைல் வால். (சைபீரியா)

6. திறந்து திறந்து மூடினாலும்
சிறிதும் ஓசை கேட்காது. (பிலிப்பைன்ஸ்)

7. எப்போதும் வயிறு
உப்பியே இருப்பாள்.
அவள் யார் ? (கொரியா)

8. பார்வை யில்லாத மனிதன்
பல பேருக்கு வழி சொல்லுவான். (ருஷ்யா)

விடைகள் : 1. பெயர் 2. எறும்புக் கூட்டம் 3. செருப்பு
4. தீக்குச்சி 5. ஊசியும் நூலும் 6. கண் இமை
7. பானை 8. கைகாட்டி.

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா தொகுத்துள்ள 'வெளிநாட்டு விடுகதைகள்' என்ற நூலிலிருந்து

10· ‘நீ அப்படிச் செய்யக் கூடியவர்தான்!’

1947–ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி காந்திஜியின் பிறந்த நாளையொட்டி ஒரு பண முடிப்பு வழங்கப் பணம் வசூலிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே கவிக்குயில் சரோஜினி தேவி காந்திஜியிடம் கேட்டார் : ‘‘இந்தப் பண முடிப்பை உங்களுக்குத் தராமல் நான் எடுத்துக் கொண்டு போய் விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?’’

எல்லோரையும் சிரிக்க வைக்கும் வகையில் வேடிக்கையாகக் காந்திஜி பதிலுரைத்தார்: ‘‘நீ அப்படிச் செய்யக் கூடியவள் தான் என்பது எனக்குத் தெரியும்!’’

— திருமதி துளசி ஜெயராமன் தொகுத்துள்ள
‘காந்திக் கதைகள் நூறு’ என்னும் நூலிலிருந்து

11. சபாபதி முதலியார் கதை

சபாபதி முதலியாருக்கு ஐந்து வயதாரம்பமானவுடன் அவரது தாய் தந்தையர் அவருக்கு வித்யாரம்பம் செய்வித்துத் தங்கள் வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு தெருப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினுர்கள். அவர் பள்ளிக்கூடத்திற்கு அடிக்கடி நாழிகை கழித்துப் போவார். உபாத்தியாயர் ''ஏன் இப்படி காலம் கழித்து வந்தாய்?'' என்று வினவினுல், தினம் ஒரு விதமாகப் போக்கு சொல்லி தப்பித்துக் கொள்வார். ஒரு நாள் அதிக காற்று மழை அடித்தது. அன்றைத் தினம் பள்ளிக்கூடத்திற்கு அதிக நேரம் கழித்துப் போனுர். உபாத்தியாயர் கோபங் கொண்டு ''ஏன் இன்று இவ்வளவு நேரம் பொறுத்து வந்தாய்?'' என்று கேட்க, ''நான் என்ன செய்வது ஐயா, இந்தக் காற்று மழையில் பள்ளிக்கூடத்திற்கு வர ஒரு அடி எடுத்து வைத்தால், இரண்டடி பின்னுல் தள்ளுகிறது'' என்று பதில் உரைத்தார். ''அது வாஸ்தவமாயின், இப்பொழுது பள்ளிக்கூடத்திற்கு என்னமாக வந்து சேர்ந்தாய்?'' என்று அவர் கேட்க, ''அதற்கு நான் ஒரு யுக்தி செய்தேன், பள்ளிக்கூடத்திற்கு வருவதற்காக வீட்டுப்புறமாக நடக்க ஆரம்பித்தேன். அந்தப் பக்கம் ஒரு அடி எடுத்து வைத்தவுடன், இரண்டடி பள்ளிக்கூடத்தின் பக்கம் தள்ளியது, இம்மாதிரியாகவே ஒவ்வொரு அடி எடுத்து வைக்க பின்பக்கமாக இரண்டிரண்டடியாகத் தள்ளிக் கொண்டு வந்து பள்ளிக்கூடத்தில் என்னை விட்டது!'' என்று பதில் சொன்னுர். இதைக் கேட்ட உபாத்தியாயர், கோபம் நீங்கி நகைத்தவராய் ''இந்த யுக்திக்காக உன்னை மன்னித்தேன்! போ!'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

— **பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 'ஹாஸ்யக் கதைகள்' என்ற நூலிலிருந்து**

12. 'சிவதனுசை எடுத்துவாருங்கள்!'

''சீதா கல்யாணத்தில், இராமர் சிவ தனுசை வளைக்கும்போது அது ஒடிந்து விடுகிறது. ஜானகி, ராமருக்கு மாலை சூட்டுகிருள். இது கதை. சபையில் பல அரசர்கள் கூடியிருக்கிருர்கள் அல்லவா? அவர்கள் எல்லோரும் முதலில் சிவ தனுசை வளைக்க முயல்கிருர்கள். யாராலும் முடியவில்லை. எதிர்பாராதபடி ஒரு நாள் சபையிலிருந்த அரசர் ஒருவர் விஷயம் தெரியாமல் வில்லில் கையை வைத்து அது முறிவதற்காகச் செய்திருந்த சூட்சுமத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்டார். இராமர் வளைக்கும் போது முறிய வேண்டிய வில்லை அந்த அரசரே முறித்து விட்டார். இப்போது நிலைமை என்ன? எப்படிச் சமாளிப்பது? ஜனக மகாராஜா வேடம் புனைந்தவர் ஒரு பழைய நடிகர். அனுபவசாலி. வில் முறிந்ததும் அவர் திகைத்துப்போய் சபையோரின் சிரிப்புக்கிடையே காவலரை நோக்கி 'சிவதனுசைக் கொண்டு வாருங்கள் என்ருல், வேறு ஏதோ ஒரு விளையாட்டு வில்லைக் கொண்டு வந்து விட்டீர்களே! மடையர்களே, போய் சிவதனுசை எடுத்து வாருங்கள்' என்ருர். பிறகு காட்சி ஒருவாறு சமாளிக்கப்பட்டது.''

— **அவ்வை தி. க. சண்முகம் எழுதிய 'நாடகச் சிந்தனைகள்' என்ற நூலிலிருந்து**

13. கண்களுக்குக் காண்டேகரின் நன்றி

வி.ஸ. காண்டேகர் ஒரு வரலாற்று நாவல் எழுதுவதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிட்டிருந்தார்; பல நூல்களைப் படித்துத் தேவையான குறிப்புக்களையும் எடுத்து வைத்திருந்தார். அந்த நிலையில் ஓர் இளைஞர் காண்டேகரிடம் வந்து தான் அந்தக் கருவை அமைத்து ஒரு நாவல் எழுதுவதற்கு அவருடைய அனுமதியை வேண்டினார். காண்டேகர் மறுக்காமல் உடனே தாம் எடுத்து வைத்திருந்த எல்லாக் குறிப்புக்களையும் அந்த இளைஞரின் கையில் கொடுத்து, அவருடைய நாவல் முயற்சி வெற்றி பெற நல்வாழ்த்தும் கூறி அனுப்பினார். அந்த இளைஞர் நாவலை எழுதி முடித்துச் சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றார். நாவலின் பெயர்: 'ஸ்வாமி'. காண்டேகரின் வாழ்த்தினைப் பெற்ற இளைஞர், இன்று மராட்டியில் புகழ்பெற்ற நாவலாசிரியராக விளங்கும் ரணஜித் தேசாய்.

காண்டேகருக்கு முதுமையில்' காடராக்ட்' வந்து இரண்டு கண்களும் பார்வை இழந்து விட்டன. நண்பர்களும் உறவினர்களும் மிகவும் வருந்தினர். அவர்களுக்கெல்லாம் காண்டேகர் ஆறுதல் கூறினார்: ''இத்தனை ஆண்டுகள் ஒரு நல்ல நண்பனாக இருந்து என் எழுத்து வாழ்க்கைக்கு ஒத்துழைத்தமைக்காக, என் கண்களுக்கு நான் நன்றி கூற வேண்டும்.''

—திரு. கா. ஸ்ரீ.ஸ்ரீ.யுடன் பேசிக்கொண்டிருந்த
போது கிடைத்த தகவல்கள்

14. அறிவுக்கு உணவு

○ எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும், கழுதையின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும், புலியின் வீரமும், புறவின் ஒழுக்கமும், சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும், மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை.

○ 'எனக்கு எல்லாம் தெரியும்' என்று கூறுகிறவன், தனக்கு ஒன்றும் தெரியாது என்பதைக் காட்டிக் கொள்ளுகிறான். 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று கூறுகிறவன், எதையோ தெரிந்து கொண்டு தான் கூறுகிறான்.

○ எச்சரிக்கையாய் இருப்பவர்களும் வாழ்வில் ஏமாற்றத்தைக் காண்கிறார்கள்! எச்சரிக்கையற்று இருப்பவர்கள் வாழ்வில் என்னென்ன காண்பார்கள்?

○ நல்லதை எண்ணத் தீயவனுக்கும், தீயதை எண்ண நல்லவனுக்கும் நேரமே இராது.

○ வாழ்ந்து கெட்ட மனிதர் சிலர்; பேசிக் கெட்ட மனிதரோ பலர். ஆகவே முதலில் காப்பாற்றப் பெற வேண்டுவது நாக்கு.

○ நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்; வந்து தடுப்பவன் மனிதன்; வந்தும் தடுக்காதவன் பிணம்.

—கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய 'அறிவுக்கு உணவு' என்ற நூலிலிருந்து

15. திரு. வி. க. இட்ட கட்டளை

"ஒரு முறை திரு. வி. க.வின் வீட்டிற்குச் சென்று பேசிக் கொண்டிருந்தேன். அவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே பேசிக் கொண்டிருந்தார். நான் எதிரே இருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். அப்போது திரு. வி. க.வைப் பார்க்க ஒரு பெரிய செல்வந்தர் காரில் வந்து இறங்கினர். அவர் இறங்கி வருவதைப் பார்த்தேன். அறையில் ஒரு நாற்காலியே இருந்தது. அதில் நான் உட்கார்ந்திருந்தேன். உடனே வருபவருக்கு இடம் கொடுக்க எண்ணி எழ முயன்றேன். என் எண்ணத்தை உணர்ந்த திரு. வி. க., 'நீ ஒரு அறிஞன். ஒரு செல்வன் வருகிறன் என்பதற்காக நீ எழக்கூடாது. நீ உட்கார். அவர் வந்த பிறகு வேறு நாற்காலி கொண்டு வந்து போடச் சொல்லி உட்காரச் செய்யலாம். நீ எழக்கூடாது. என் கட்டளை இது' என்றார். அவர் குரலில் இருந்த உணர்ச்சிக்கு இணங்கி உட்கார்ந்திருந்தேன். அவர் சொன்னவாறே செய்தார்."

—மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சார்பில் நிகழ்ந்த 'அகிலன் கருத்தரங்க விழா'வின் தொடக்க உரையில் டாக்டர் மு. வ. ஆற்றிய சொற்பொழிவிலிருந்து

16. சிலையும் சிந்தனையும்

மாவீரன் அலெக்சாந்தரைப் பார்க்க ஒரு விருந்தினர் வந்தார். அவரை அவன் நன்கு உபசரித்தான். தனது மாளிகையிலேயே தங்க வைத்தான். பிறகு அவரைத் தனது அரண்மனைத் தோட்டத்திற்கு அழைத்துப் போனான்.

இருவரும் தோட்டத்தைச் சுற்றி வந்தார்கள். தோட்டத்தில் அநேக பெரிய வீரர்களின் உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. விருந்தினர் ஒவ்வொரு சிலையிடமும் நிற்பார். அலெக்சாந்தர் அவருக்கு அதன் வரலாற்றைச் சொல்லுவான் இவ்வாறு ஒவ்வொரு சிலையாகப் பார்த்துக்கொண்டே தோட்டத்தின் கடைசிக்கு வந்துவிட்டான்.

வந்த விருந்தினர் அலெக்சாந்தரைப் பார்த்தார். ''இத்தனை வீரர்களின் சிலைகள் இந்தத் தோட்டத்தில் இருக்கும்போது உங்களுடைய சிலை மட்டும் இங்கு ஏன் இல்லை?'' என்று கேட்டார்.

''இங்கு எனது சிலையைப் பார்த்து, இது யாருடைய சிலை என்று வருபவர்கள் கேட்பதை விட, மாவீரன் அலெக்சாந்தருடைய சிலை ஏன் இங்கு இல்லை என்று கேட்பதையே நான் விரும்புகிறேன்'' என்று பதில் சொன்னான் கிரேக்க மன்னன்.

—வினோபாவின் 'குட்டிக் கதைகள்' என்னும் நூலிலிருந்து

17. ஏன்? ஏன்?

○ அச்சு வண்டி ஓடுவதேன்?
அக்காள் புருஷன் மச்சானவதேன்?

—அக்காளையிட்டு.

○ ஆலிலை உதிர்வதேன்?
இராவழி நடப்பதேன்?

—பறிப்பாரில்லாமல்.

○ எருக்க இலை பழுப்பதேன்?
எருமைக் கன்று சாவதேன்?

— பால் வற்றி.

○ காற்றுடி பறப்பதேன்?
கல்வி வளர்வதேன்?

— நூலினால்.

○ கீரை விதைப்பதேன்?
கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?

— பிடுங்கித் தின்ன.

○ பற்கள் தெரிவதேன்?
பொற்கொல்லன் தட்டுவதேன்?

— நகையால்.

○ வினை வெளிவருவதேன்?
வைக்கோல் போர் போடுவதேன்?

— விடைக்காக.

— டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் தொகுத்துள்ள
‘தமிழில் விடுகதைகள்’ என்ற நூலிலிருந்து

18. சி. வை. தாமோதரம் பிள்ளையின் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்து அறிஞர் சி. வை தாமோதரம் பிள்ளை 1887-இல் வெளியிட்ட 'கலித்தொகை'யின் பதிப்புரையில் இவ்வாறு உருக்கமாக எழுதியுள்ளார் :

''இக்காலத்துப் புத்தகங்களைத் தேடிப் பரிசோதித்து அச்சியற்றும் வித்வசனர்களோ தமக்குப் பொருள் வரவையே கருதி விரைவில் விலை போகும் விநோத நூல்களையும் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான பாட புத்தகங்களையுஞ் சர்வ கலாசாலையாராற் பற்பல பரிக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட போதன பாகங்களையுமே அச்சிடுகின்றனர். சரஸ்வதியின் திருநடனஞ் சொலிக்கப் பெற்றனவாகிய சங்க மரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் அவர்களுக்குச் சற்றேனுந் திருட்டி சென்றிலது.

இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்து போகுஞ் சுவடிகளை இயன்ற மட்டுந் தேடி, அவற்றுட் தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சொல்லதிகாரஞ் சேனாவரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், வீர சோழியம், இறையனாரகப் பொருள், திருத்தணிகைப் புராணமென்று இன்னவற்றைப் பல தேசப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன். இதனால் எனக்குப் பிரதிகள் விலைபோகாமல் மூவாயிரத்தைஞ்ஞூறு ரூபா வரையிற் திரவிய நஷ்டம் நேரிட்டது. இவ்வாறான நஷ்டத்தைத் தரும சீலரான பிரபுக்கள் நன்கொடை முதலிய சகாயஞ் செய்து பரிகரித்தாலன்றி என் முயற்சியைக் கைவிடும்படி நேரிடுவது கண்டு பரிபவமுற்றுச் சென்ற வருஷம் ஆடி மாதம் ஹிந்து பத்திர வாயிலாக ஓர் அபயம் எழுதி என் குறைமுறையை உலகிற்குத் தெரிவித்ததுமின்றி எனது இஷ்டர்கள் பலர்க்குந் தமிழ்ப் பிரபுக்கள் சிலர்க்கும் அக்கடிதத்தின் பிரதியைப் பிரத்தியேகமாகவும் அனுப்பினேன். அது கண்டு அநுதாபமுற்றோர் சிலரன்றி இலர்.''

19. சிந்தனை மலர்கள்

○ கடவுளுக்குப் பெரிய இராச்சியங்களின் மேல் சலிப்பேற்படுகிறது; ஆனால் சிறு மலர்களின் மேல் ஒரு நாளும் சலிப்பில்லை.

○ சாவில் பல ஒன்ருகும்; வாழ்வில் ஒன்று பலவாகும்.

○ சந்திரன் வானவெளி எங்கும் தனது வெண்சுடரை வீசுகிருன்; தனது களங்கத்தைத் தன்னிடமே வைத்துக்கொள்ளுகிருன்.

○ அரவமில்லாத இரவினிடத்திலே தாயின் அழகு இருக்கிறது; இரைச்சலோடு கூடிய பகலினிடத்தில் குழந்தையின் அழகு இருக்கிறது.

○ தவறுகள் எல்லாவற்றையும் வெளியே நிறுத்திக் கதவைத் தாளிடுவாயானல் உண்மை வெளியே நின்று விடும்.

○ கடவுளின் பேராற்றல் மெல்லிய பூங்காற்றில் இருக்கிறது; புயற்காற்றில் அல்ல.

○ பகலவன் மறைந்ததற்காக அழுதால் நட்சத்திரங்களையும் காண முடியாது.

○ அம்பு தன்னை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு வில் அதனிடம் மெதுவாகக் கூறுகிறது: ''உனது விடுதலையே எனது விடுதலை.''

○ உனது அன்பிலே எனக்கு நம்பிக்கையுண்டு என்ற இதுவே எனது கடைசி வார்த்தையாக இருக்கட்டும்.

— இரவீந்திரநாத தாகூரின் 'விடுதிப் பறவைகள்'
(Stray Birds) என்ற நூலிலிருந்து

20. 'டீயே மதுரம்'

ஒரு சமயம் கல்கி, என். எஸ் கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்-றிருந்தார். ''என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டு வரச் சொல்லட்டுமா? டீ கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று ருகிஷ்ணன் கல்கியிடம் கேட்டார். சற்று யோசித்து விட்டு, '' டீயே மதுரம் '' என்றார் கல்கி.

— 'எழுத்தாளர் கல்கி' என்னும் நூலிலிருந்து

21. 'தம்ம பத'த்திலிருந்து...

○ நிலையான பாறை புயல் காற்றுக்கும் அசையாமலிருப்பது போல், ஞானிகள் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசைவதில்லை.

○ ஒருவன் ஆயிரம் பேர் கொண்ட ஆயிரம் படைகளை வெற்றி. கொள்கிறான்; மற்றொருவன் தன்னைத் தானே அடக்கி வெல்கிறான் இவர்களுள் தன்னை வென்றவனே வெற்றி வீரருள் முதன்மையானவன்.

○ மனிதன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை.

○ இந்த உலகம் அரசனுடைய அலங்கரிக்கப் பெற்ற தேர் போல் ஜொலிப்பதை வந்து பார்! பேதைகள் இதிலே ஆழ்ந்து விடுகிறார்கள், ஞானிகளுக்கு இதிலே பற்றில்லை.

○ முற்றிலும் நிந்திக்கப்பட்டவனும், முற்றிலும் புகழப்பட்டவனும் ஒருகாலும் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை, இப்போதுமில்லை.

○ எவனுடைய சிந்தை (குற்றங்களால்) கலக்கமடையாமல் இருக்கிறதோ, எவனுடைய சிந்தை குழப்பமற்றுள்ளதோ, எவன் புண்ணியம் பாவம் (இரண்டையும்) பற்றிச் சிந்திப்பதில்லையோ, எவன் விழிப்புடன் உள்ளானோ, அவனுக்கு அச்சமில்லை.

○ உடலை அடக்கி, நாவை அடக்கி, மனத்தையும் அடக்கியுள்ள ஞானிகளே உண்மையான நல்லடக்கமுள்ளவர்கள்.

—பௌத்தத் திருமுறையான 'தம்ம பதம்'
என்ற நூலிலிருந்து

22. 'உன்னிடம் இல்லாத ஒன்றே தேவை'

ரஷ்ய அறிஞர்களில் ஒருவராகிய ஜவான் கிரைலோவ் எழுதிய ஒரு நீதிக் கதை:

வண்டிக் கூண்டுக்கு வேண்டிய பிரம்புகளையும், கம்புகளையும் ஒரு தொழிலாளி இலாவகமாக வளைப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கரடி, தானும் அது போல் செய்யத் தொடங்கிற்று. அது காட்டிலுள்ள கொப்புகளையும் கழிகளையும் பறித்து வந்து குவித்துக் கொண்டு, ஒவ்வொன்றாக எடுத்து மளமளவென்று வளைத்துப் பார்த்தது. ஆனால் எல்லாக் கம்புகளும், கழிகளும் சடசடவென்று முறிந்து விழுந்தன. ஒன்றும் பயனில்லாமற் போகவே, அந்தக் கரடி நேராகத் தொழிலாளியிடம் போய், 'எவ்வளவோ எச்சரிக்கையுடன் நான் வளைத்துப் பார்த்தாலும் ஒரு கழியைக் கூட வில்லைப் போல் வளைக்க முடியவில்லையே! இதற்கு இன்னும் என்ன வேண்டுமென்று தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்!' என்று கேட்டுக் கொண்டது.

தொழிலாளி, 'உன்னிடம் இல்லாத ஒன்று அதற்குத் தேவை; அதுதான் பொறுமை!' என்றான்.

—ப. ராமஸ்வாமி தொகுத்துள்ள '105 நுண்ணறிவூட்டும் கதைகள்' என்ற நூலிலிருந்து

23. மார்க்கஸ் அரேலியஸ் மணிமொழிகள்

○ குற்றம் செய்யும் பொழுது குற்றம் செய்கிறோம் என்று உணரும் அறிவு போய்விட்டால், அதன்பின் உயிர் வாழ்வதால் என்ன பயன்?

○ மக்கள் சிறப்பெல்லாம் அவர் விரும்பி நாடும் விஷயங்களின் சிறப்பளவேயாகும்.

○ இன்ப வாழ்விற்கு அவசியமான பொருள்கள் மிக மிகச் சொற்பமே.

○ ஒருவன் எவ்வளவு தாங்க முடியுமோ அவ்வளவுக்கு மேலான கஷ்டம் அவனுக்கு ஏற்படுவதில்லை.

○ தீமை செய்தாரை ஒறுத்தற்குச் சிறந்த மார்க்கம் அவர் போல் நடவாதிருப்பதேயாகும்.

○ மனச்சாந்தியோடு நின்று தேவ வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சாதனங்கள் மிக மிகச் சிலவேயாகும்.

○ இப்பொழுது நிகழ்பவை இனி நிகழ்பவைகளுக்கு ஒரு விதத்தில் வித்தாகும்.

○ நல்ல மனிதன் என்பவன் எப்படிப்பட்டவனாய் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி இனிப் பேசாதே, ஆனால் நீ நல்ல மனிதனாய் இரு.

○ ஒருவன் செய்யத் தக்கவைகளைச் செய்யாமையாலும் அநீதி செய்கிறான், செய்யத் தகாதவைகளைச் செய்வதாலும் அநீதி செய்கிறான்.

—பெ. திருகூட சுந்தரம் எழுதிய 'இதய உணர்ச்சி' என்ற நூலிலிருந்து

24. ‘வீட்டிற்குள் இருக்கும் விலையுயர்ந்த பொருள்’

பாரசீக மொழியில் அழியாப் புகழ் பெற்ற காவியங்களை எழுதியவர் மௌலானா ஜாமி. அவரிடம் ஒரு வழக்கம் இருந்து வந்தது. அதாவது: அவர் வீட்டிற்குள் நுழைந்ததும் கதவை மூடித் தாழிட்டுக் கொள்ளுவார்; வெளியே வரும் போது இரண்டு கதவுகளையும் நன்றாகத் திறந்து போட்டுவிடுவார்.

அவர் இவ்வாறு செய்வதன் காரணம் ஒருவருக்கும் புரியவில்லை. ஒரு நாள் நண்பர் ஒருவர் கேட்டார்: ‘‘என்ன இப்படிச் செய்கிறீர்கள்? எல்லோரும் வீட்டிற்குள் இருக்கும் போது கதவைத் திறந்து வைத்திருப்பார்கள்; வெளியே செல்லும்போது கதவுகளை மூடி விட்டுச் செல்லுவார்கள். தாங்கள் செய்வது அதற்கு நேர் மாறாக இருக்கிறதே?’’

ஜாமி பதில் சொன்னார்: ‘‘வீட்டிற்குள் இருக்கும் போது அதற்குள் இருக்கும் மிக விலையுயர்ந்த பொருள் நான்தான். அதனால் கதவை மூடிக்கொள்ளுகிறேன். வெளியே செல்லும் போது வீட்டிற்குள் இருக்கும் மற்ற பொருள்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஏனெனில் அவையெல்லாம் அத்துணை மதிப்புடையவையல்ல. அதனால்தான் நான் கதவுகளைத் திறந்து போட்டு விடுகிறேன்.’’

—அப்துற்-றஹீம் தொகுத்துள்ள ‘படியுங்கள்! சுவையுங்கள்!’ என்ற நூலிலிருந்து

25. 'காதா சப்த சதி'யிலிருந்து இரு பாடல்கள்

1

ஆசையைக் காக்கின்றான்

குடும்பத்தின் வறுமை நிலையை
நன்குணர்ந்த குலமகள் அவள்.

கருக்கொண்ட நாளிலிருந்து
'உனக்கு விருப்பமான உணவு வகைகளைக் கேள்
வாங்கித் தருகிறேன்'
என்று கணவன் வற்புறுத்துகிறான்.
மாமியும் 'நீ ஆசைப்படுவதைக் கேள்' என்கிறாள்.

ஆனால் அக்குலமகள்

நெருங்யகி நண்பன் வீசிய கடுஞ்சொல்லை
யாரிடத்தும் சொல்லாமல் காப்பது போல்

தான் விரும்பும் தின்பண்டத்தின் பெயரை
வெளியில் சொல்லாமல் தன்னைக் காத்து வருகிறாள்.

*　　　*　　　*

2

அவரிடம் ஒன்றும் சொல்லாதே

தோழி! அவரிடம் ஒன்றும் சொல்லாதே
அவர் மறதியால்

என்னை வேறொருத்தியின் பெயரிட்டழைக்கிறார்
அதனால் தவறொன்றும் இல்லை

அவர்

தான் விரும்பிய அந்த ஒருத்தியின் மீதாவது
ஆழ்ந்த நிலைத்த காதல் கொள்ளட்டும்.

— இரா. மதிவாணன் வெளியிட்டுள்ள 'ஆந்திர நாட்டு அகநானூறு' (காதா சப்த சதி) என்ற நூலிலிருந்து

26. டாக்டர் மு. வ. வின் கடிதங்களிலிருந்து . . .

○ உடல் மெலிந்திருக்கலாம்; ஆனால் உள்ளம் மெலிந்திருக்கக் கூடாது.

○ எதன் பொருட்டாகவும் உடல் நலம் கெடுவதற்கு இடம்தரக் கூடாது. உடல் நலம் இருந்தால் தையல் கடை வைத்தும் பிழைத்துக் கொள்ள முடியும். ஆகவே உடல் நலம் முதன்மை-யானது.

○ மனத்தைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலே-யும் தாங்கும் இரும்புக் கோட்டையாக வைத்திருக்கக் கற்க வேண்டும்.

○ கடமையைச் செய்து உயர்ந்த மனப்பான்மையோடு விளங்க வல்-லவர்க்கு இடர்ப்பாடு வரினும் அது இடுக்கட்படும்.

○ தீயோரின் பார்வையின் ஒளி, பேச்சின் ஆற்றல், உடம்பின்உரம், அறிவின் திறம், தந்திரம், வஞ்சம் எல்லாவற்றிலும் இறைவனு-டைய திருநடத்தைக் காண்பதே வழிபாடு.

○ வாழ்க்கை மிகப் பெரிய கலே. அதில் தேர்தல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக விளங்குதலே சமுதாயத்திற்கு நாம் செய்யத் தக்க நல்ல தொண்டு; எப்படி எனின், நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு, நாம் ஒரு நூலாகப் பயன்படுவோம்.

— ஈ. ச. விசுவநாதன் வெளியிட்டுள்ள 'மு. வ. வின் கடிதங்கள்' என்ற நூலிலிருந்து

27. ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதை

ஒரு முறை வண்ணான் ஒருவன் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான். அப்போது பக்தன், ''நாராயணா!நாராயணா!'' என்று மட்டும் சொல்லி அலறினான்.

அப்போது ஸ்ரீமந் நாராயணன் வைகுண்டத்தில் லட்சுமி ஸமேதராய் வீற்றிருந்தார். அவருடைய காதில் பக்தனின் அறை-கூவல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானார். தேவி அவரிடம், ''நாதா, தாங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''தேவி, எனது பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கிறான். நான் அவனைக் காப்பாற்றியாக வேண்டும்'' என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக ஸ்ரீமந் நாராயணன் புறப்பட்டார்.

ஆனால், இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தமது ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

இதைப் பார்த்த லட்சுமி திகைத்தாள். ''பிரபோ, இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே, ஏன்?'' என்று கேட்டாள்.

நாராயணர் புன்முறுவல் பூத்தபடியே பதில் சொன்னார். ''நான் போக வேண்டிய அவசியமே இல்லாமல் போனதைப் பார்த்தேன். அந்தப் பக்தனும் வண்ணானாகி விட்டான். தன்னைத் தானே அவன் காப்பாற்றிக் கொள்ள நினைத்தான். இப்போது தன்னை அடித்தவனை அவன் திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறான். ஆகவே நான் அங்கு போய்ச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. எனவே அவசியம் இல்லாததால் நான் திரும்பி வந்துவிட்டேன்'' என்று பதில் சொன்னார்.

—'ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்'
என்னும் நூலிலிருந்து

8. தமிழ்நாட்டுப் பழமொழிகள்

○ வீடு அசையாமல் தின்னும்; யானை அசைந்து தின்னும்.

○ முப்பது வருடம் வாழ்ந்தவனும் இல்லை, முப்பது வருடம் தாழ்ந்தவனும் இல்லை.

○ மயிர் ஊடாடாத நட்பும் பொருள் ஊடாடக் கெடும்.

○ தோட்டி போல் உழைத்துத் துரை போல் சாப்பிட வேண்டும்.

○ சொல்லிப் போக வேணும் சுகத்துக்கு; சொல்லாமற் போக வேணும் துக்கத்துக்கு.

○ ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?

○ உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.

○ எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய் உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்?

○ அவள் பேர் கூந்தலழகி, அவள் தலை மொட்டை.

○ அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக் கூடாது.

○ அரைக் காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது.

○ கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டும்.

—'தமிழ்நாட்டுப் பழமொழி அகர வரிசைச் சுருக்கம்' என்ற நூலிலிருந்து

29. சமயோசிதம்

மருமகளுக்கும் மாமியாருக்கும் பகை. மாமியாளைத் தீர்த்துக் கட்டி விடுவது என்று தீர்மானித்து விட்டாள் மருமகள்.

ஒரு நாள் பகலில், மாமியாள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்-தாள். உலக்கையால் ஒரே போடில் மூக்காந்தண்டில் போட்டு விடுவது என்று தீர்மானித்து ஓங்கினுள் மருமகள். குறி தவறி கழுத்தில் விழுந்தது உலக்கை. காலடி அரவம் கேட்டு உலக்கையை மூலையில் பாத்தி விட்டு திகைத்துக் கொண்டிருக்கையில் புருஷன் வந்தான். தன்னுடைய தாய் கிடக்கும் நிலை கண்டு, ''அம்மா, என்ன, என்ன?'' என்று கேட்டான். தாயாரால் பேச முடியவில்லை. கை ஜாடையால் உலக்கையையும், தன் கழுத்தையும், பின்பு மருமகளையும் காட்டி விட்டு கண்ணை மூடிவிட்டாள். மகனுக்குத் தாய் என்ன சொன்னுள் என்று புரியவில்லை. மனைவியைப் பார்த்தான்.

அவளோ, சாவதானமாக, ''என்ன நீங்கள்! இது கூடத் தெரியலையா? உலக்கை மாதிரி நிக்கிறியே; என் கழுத்திலுள்ள சங்கிலியை எடுத்து உன் மனைவிக்குக் கொடுத்து விடு, நான் போகி-றேன் என்று சொல்கிருர்கள்'' என்று பதில் சொல்லிவிட்டு, ''அடி-யம்மா, என்னைப் பெத்த ராசாத்தீ!'' என்று கூறிக் கொண்டே மாமியாளின் மேலே விழுந்து அழுதாள்.

— கி. ராஜநாராயணன் தொகுத்துள்ள 'தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்' என்ற நூலிலிருந்து

30. சில உவமைகள்

மலையாளச் சிறுகதைகளிலிருந்து:

○ மக்கள் திரளாக வந்துள்ள பொதுக் கூட்டத்தை நோக்கி வாழ்க்கையில் முதன்முதலாகச் சொற்பொழிவாற்றப் போகின்றவனைப் போன்று தயக்கமும், கலக்கமும் அவனுக்கு உண்டாயின.

○ தெரிந்துகொண்டே பெருநஷ்டத்தை ஏற்க நேரும்போது ஒரு வியாபாரி வருத்தப்படுவானே, அதே போல் வருத்தம் தொம்மனுக்கு !

○ சுருட்டை மயிர், பூப்பிரசாதம் காதில் செருகி வைத்தது போல வலது காதிற்கு மேல் அகால முதுமையின் அடையாளமாகக் கொஞ்சம் நரைத்திருக்கிறது.

○ அவள், தலையைத் தூக்கி, வீட்டுக் கணக்கைச் செய்து வராத மாணவனைத் தலைமை ஆசிரியை பார்ப்பது போல் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள்.

○ அந்திக் காலத்தில் சுவாசிக்கப்படும் காற்றைப் போல ஆர்வம் நிரம்பிய ஆசையுடன் ஒவ்வொரு கணமும் காத்திருந்தாள்.

○ அவள் நடு இரவில் சிம்னி விளக்கை ஏற்றினாள். தலைகீழாகப் பிடித்த ஆலிலை போல் அது ஒளிவிட்டது.

○ காலம் கழிந்து கொண்டிருந்தது, குடிகாரனின் கானத்தைப் போல.

○ அரசனின் பின்னால் அங்கி போன்று, வசவும் அவர் பின்னால் இழைந்து கொண்டே சென்றது.

31. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்'

பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' இரண்டாம் பதிப்புக்கு வ. வே. சு. ஐயர் எழுதியுள்ள முன்னுரையிலிருந்து:

''இந் நூலைத் தமிழுலகம் ஆதரித்துத் தான் இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. ஆனால், ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர் எழுதிய ஆங்கிலக கீர்த்தனங்களின் விலை மூன்று ரூபாயாகவிருக்க, அளவில் அந் நூலில் குறையாததும், சுவையில் அதற்கு இணையாக இருப்பதுமான இந்நூலின் முதற் பதிப்புக்குக் காகித விலை ஏறி விற்ற காலத்தில் பதிப்பாசிரியர் விலை கால் ரூபாயாகக் குறிக்க வேண்டியிருந்தது என நினைக்கும் போது, நாட்டில் தமிழபிமானம் வெளிப்படையாக விளங்கவில்லையென்ருவது ஒப்புக் கொள்ள வேண்டும். முன் காலத்தில், ஆசிரியர்களுக்கு அரசர்கள் ஏராளமான பொருள் உதவி செய்து, அவர்கள் மனதைச் சிறிய விசாரங்கள் பீடிக்காமல் காத்து வந்து, அவர்களுடைய ஆற்றல் நாளுக்கு நாள் அதிகரிக்கும் படி செய்து வந்தார்கள். தற்காலத்தில் கல்வியபிமானமுள்ள பொதுஜனங்கள் தாம் அக்காலத்து அரசரின் ஸ்தானத்தை வகிக்கிருர்கள். இவர்கள் தங்கள் அபிமானத்தை, விலையைப் பொருட்படுத்தாமல் நூல்களின் யோக்கியதையைக் கருதி ஆதரித்துத் தான், காட்ட முடியும். நமது ஆசிரியரின் நூல்களை நம் நாட்டவர் சரிவர ஆதரிக்காததனுலே, 'சுற்றி நில்லாதே போ, பகையே — துள்ளி வருகுது வேல் என்றும்', 'கைதனில் வில்லும் உண்டு : 'காண்டீபம் அதன் பேர்' என்றும் உள்ள அக்ஷர லக்ஷம் பெறுமான பாக்களை எழுதியிருக்கும் அவருடைய உற்சாகம் குன்றிப் போயிருக்கிறது. தமிழபிமானிகள் இப்பதிப்பை ஆதரித்து வாங்கி ஆசிரியருடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் தமிழில் புதிய இலக்கியங்கள் பிறக்கும் படி செய்வார்கள் என நம்புகிறேன்.''

32. நல்ல சிந்தனைகள்

○ ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனுடைய பத்து விரல்கள்.

— ராபர்ட் கோலியர்

○ நாம் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால், நமக்குப் போதிய நேரம் இருக்கத் தான் செய்யும்.

— கதே

○ மௌனமாய் இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.

— புளுடார்க்

○ நாம் வாளி வாளியாகப் பிறருக்கு ஆலோசனை சொல்லுவோம். ஆனால் பிறருடைய ஆலோசனையில் நாம் குன்றிமணி அளவே எடுத்துக் கொள்வோம்.

— ஆல்ஜெர்

○ பைசாவை நீங்கள் கவனித்தால் போதும், ரூபாய்கள் தாங்களே தங்களைக் கவனித்துக் கொள்ளும்.

— ஃபிராங்க்லின்

○ எந்த மனிதனும் தவறு செய்யக் கூடும்; ஆனால் முட்டாளைத் தவிர வேறு எவனும் அதைத் தொடர்ந்து செய்யமாட்டான்.

— ஸிஸரோ

○ ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதை விட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

— மெகாலே

— ப. ராமஸ்வாமி தொகுத்துள்ள 'உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம்' என்ற நூலிலிருந்து

33. நரியும் காட்டுப் பன்றியும்

ஒரு காட்டுப் பன்றி ஒரு மரத்தில் தன் கொம்புகளைத் தீட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த நரி, ''எதிரி ஒருவரையுமே காண-வில்லையே, நீ ஏன் கொம்புகளைத் தீட்டுகிறாய்?'' என்று கேட்டது.

காட்டுப்பன்றி, ''எதிரி நம் முன்னால் வந்து விட்டால் அப்-பொழுது எப்படிக் கொம்புகளைத் தீட்ட முடியும்? சும்மா இருக்கிற நேரத்தில் தானே தயார் செய்து கொள்ள வேண்டும்'' என்று சொன்னது.

யுத்த காலத்திற்கு வேண்டிய காரியங்களைச் சமாதான காலத்-தில் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

— வை. கோவிந்தன் தொகுத்துள்ள 'ஈசாப் குட்டிக் கதைகள்' என்ற நூலிலிருந்து

34. பழமொழிகளில் பெண்கள்

O உலகில் இரண்டு பெண்களைத் தான் நல்லவர்கள் என்று சொல்லலாம். ஒருத்தி செத்துப் போனவள்; மற்றொருத்தி காணமற் போனவள்.

— ஜெர்மன் பழமொழி

O கோடரியின் ஒரே வெட்டில் மரத்தைச் சாய்க்க முடியாது. ஆனால் காதலியின் ஒரே பார்வையால் மனிதனைச் சாய்க்க முடியும்.

– மெக்சிகோ பழமொழி

O ஒரு பெண்ணைச் சிந்திக்க வைப்பதை விட, நடனமாட வைப்பது சுலபம்.

— ஹங்கேரியப் பழமொழி

O ஒரே பெண்ணை எப்பொழுதும் காதலிக்க முடியாது.

— சீனப் பழமொழி

O பெண் முடிந்த போது சிரிப்பாள். ஆனால் நினைத்த போது அழுவாள்.

— பிரெஞ்சுப் பழமொழி

O கன்னிப் பெண்ணுக்குக் கணவனைத் தவிர வேறு எதுவும் வேண்டியதில்லை. கணவன் கிடைத்த பின் அவளுக்கு எல்லாம் வேண்டும்

— ஆங்கிலப் பழமொழி

O செத்த பிறகு தான் பெண்களுக்கு ஞானப் பல் முளைக்கிறது.

-- ருமேனியப் பழமொழி

—ரோஜா முத்தையா தொகுத்துள்ள 'பெண்ணே, உன்னைத் தான் !' என்னும் நூலிலிருந்து

35. சித்திர மின்னல்கள்

புத்தகம்

கற்பை இழக்காத பரத்தை

மின்மினி

சிறகுத் தாரகை!

கண்ணீர்

கண்ணின் ஆபரணம்!

மரங்கள்

பறவைகளின் தாய்நாடு

புன்னகை

பற்கள் என்ற முட்களே
பூக்கும் மலர்

முத்தம்

காதல் சபையில்
பேச்சுக்கு எதிராக நிறைவேறும்
நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

முதுமை

ஞாபகங்களின்
குப்பைக் கூடை

வியாதிகளின்
மேய்ச்சல் நிலம்

— அப்துல் ரகுமானின் 'நேயர் விருப்பம்' என்ற
புதுக்கவிதைத் தொகுப்பிலிருந்து

36. கபீர் தாஸரின் சிந்தனைகள்

O எந்த உடலில் அன்பு இல்லையோ அதை மயானம் என்று அறி. கொல்லன் துருத்தி போல அது மூச்சு விடும்; உயிர் இருக்காது.

O பசி ஒரு நாய். கடவுள் நினைவில் ஈடுபட்டிருக்கும் போது இடையூறு செய்கிறது. அதற்கு ஒரு துண்டை எறிந்துவிட்டுக் கவலை-யின்றி தியானம் செய்.

O மனமே, பதற்றமடையாதே!மெல்ல மெல்லத்தான் எல்லாம் நடக்கும். தோட்டக்காரன் நூறு குடம் நீர் ஊற்றினாலும் பருவம் வந்தால் தான் பழம் பழுக்கும்.

O சாவதென்றால் செத்துவிடு. சங்கடம் நீங்கும். இது என்ன சாவு, ஒரு நாளில் நூறு நூறு தடவைகள்?

O இலட்சம் பேர் இருந்தாலும் கூட, ஏ, ஆண்டவனே, நீ என்னை மறக்காதே. என்னைப் போல் உனக்குப் பலர் இருக்கலாம். ஆனால் உன்னைப் போல் எனக்கு வேறு ஒருவரும் இல்லை.

O உண்மையை ஒருவனும் நம்புகிறதில்லை. பொய்யை உலகம் நம்புகிறது. மோரைத் தெருத் தெருவாய் அலைந்து விற்கிறார்கள். கள் உட்கார்ந்த இடத்தில் விற்றுப் போகிறது.

— 'கபீர் அருள்வாக்கு' என்ற நூலிலிருந்து

37. வாலும் தலையும்

ஒரு நாள் நாயிடம், ''உன்னைக் கண்டால் எனக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்குக் கூடப் பொருமையாய் இருக்கிறது!'' என்றது பூனை.

''ஏனும்?'' என்று கேட்டது நாய்.

''வாலை ஆட்டி ஆட்டிக் காட்டியே நீ பிழைத்துக் கொள்கிருய் அல்லவா, அதனுல் தான்!'' என்றது பூனை சிரித்துக் கொண்டே.

நாய் அதைத் திருப்பிக் கேட்டது: ''மனிதர்களில் சிலர் தலையை ஆட்டி ஆட்டிக் காட்டியே பிழைத்துக் கொள்கிருர்களே, அதற்கென்ன சொல்கிருய், நீ?''

பூனை வாயைத் திறக்கவில்லை.

—விந்தனின் 'மகிழம் பூ' என்ற குட்டிக்
கதைத் தொகுப்பிலிருந்து

38. ராஜாஜி உவமைகள்

○ சைவனுக்கு மாமிசத்தின் மீது எத்தகைய வெறுப்பு இருக்கிறதோ, அத்தகைய வெறுப்பு அடிமைத்தனத்தின் மீது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

○ தித்திப்புப் பட்சணங்களைச் சாப்பிடும் போது சிறிது காரமும் சேர்த்துக் கொண்டால் தான் அதிகமான தித்திப்புப் பட்சணங்களைச் சாப்பிட முடியும். அதுபோல ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தோடு சிறிது கஷ்டத்தையும் அனுபவித்தால் தான் அதிகமான சந்தோஷத்தை அடைய முடியும்.

○ நெற் பயிர் போல் மனிதர்கள் வளர்ந்து, முதிர்ந்து, அறுபடுகிறார்கள்.

○ விதையைப் பிளந்து நட்டால் செடி முளைக்காது. அதே போல், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இரண்டு பட்டால் தேசம் செழிக்காது.

○ பந்துக்குக் காற்று எப்படி அவசியமோ, அப்படி காங்கிரஸிற்கு மகாத்மா காந்தி அவசியமாகும். அவர் இல்லாத காங்கிரஸ், காற்றில்லாத பந்து போல இருக்கும்.

○ கவர்னர் பதவி என்பது சுலபமான வேலையல்ல. இழுத்துப் பிடித்துக் கட்டப்பட்ட ஒற்றைக் கயிற்றில் நடந்து நடனமாடுவது போன்றது அதன் வேலை.

—சின்ன அண்ணாமலை தொகுத்துள்ள 'ராஜாஜி உவமைகள்' என்ற நூலிலிருந்து

39. மணமக்களுக்கு . . .

மணமகனுக்கு நேற்று வரை இரு கண்கள். இனி அது கூடாது. நாளையிலிருந்து மணமகளின் இரு கண்களையும் பயன்படுத்தி, உற்றார் உறவினர்களையும், உலகத்தையும் நான்கு கண்களால் பார்த்து வாழ்வைத் தொடங்க வேண்டும். மணமகளுக்கு நேற்று வரை இரு காதுகள். இனி அது போதாது. நாளையிலிருந்து மணமகனின் இரு காதுகளையும் பயன்படுத்திக் கொண்டு, நான்கு காதுகளால் உற்றார் உறவினர்களின் செய்திகளையும், உலகின் செய்திகளையும் கேட்டு வாழ்க்கையை நடத்தியாக வேண்டும்.

வாழ்வில் வெற்றி பெற இவ்விரண்டு மட்டும் போதாது. மணமகனும், மணமகளும் தங்களின் வாய்கள் இரண்டையும் நான்காகப் பெருக்கிக் கொள்ளாமலும், இரண்டாக வைத்துக் கொள்ளாமலும், ஒன்றாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் வாழ்வில் வெற்றி காண முடியும். கணவன் உண்டால் மனைவி உண்டது போல, மனைவி உண்டால் கணவன் உண்டது போல; கணவன் ஒருவருக்கு வாக்குக் கொடுத்து விட்டால் மனைவி வாக்குக் கொடுத்தது போல, மனைவி ஒருவருக்கு வாக்குக் கொடுத்து விட்டால் கணவன் வாக்குக் கொடுத்தது போல. காதுகளும் கண்களும் நான்கு; வாய் நான்குமல்ல, இரண்டுமல்ல, ஒன்று என்று ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான், வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் காணலாம். இதை மணமகனும் மணமகளும் உள்ளத்திற் கொண்டு வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.

—கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய
'மணமக்களுக்கு' என்ற நூலிலிருந்து

40. மனிதனைப் பற்றி . . .

○ எந்தக் காலத்திலுமே உலகத்தில் முற்றிய மனிதர்களின் எண்ணிக்கை குறைவு; பிஞ்சு மனிதர்களின் எண்ணிக்கைதான் அதிகம்.

○ சிந்தனை செய்யாத மனமும், செயலாற்ருத வாழ்வும் சவக் குழியிலே சரண் புகுவதற்குத் தகுதியுடையவை.

○ ஒருவன் மனிதனுகப் பிறந்து விடலாம்; மனிதனுக வாழத் தெரிய வேண்டும்.

○ வாழ்ந்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை; மூச்சு விட்டுக் கொண்டிருப்பது வாழ்க்கையல்ல.

○ எவன் மற்றவர்களின் அவல நிலையைக் கண்டுஐயோ என்று பெருமூச்சு விடுகிருனே, மூச்சு விடுவதோடு நின்று விடாமல் தன் பேச்சினுலும் செயலினுலும் அந்த அவல நிலையிலிருந்து அவர்களை மீட்க, சிரித்த முகத்துடன் முன்வருகிருனே அவன் பெரிய மனிதன்.

○ நூலறிவும் செல்வச் சிறப்புமுடையது மட்டும் வாழ்க்கை-யாகாது; பிறருக்குப் பயனுடையதாய் இருப்பது தான் வாழ்க்கை.

○ 'ஒரு மனிதனை அவன் மேலே என்ன இருக்கிறதென்று பார்த்து மதிப்பிடாதே; அவன் உள்ளே என்ன இருக்கிறதென்று பார்த்து மதிப்பிடு.'

—வெ.சாமிநாத சர்மா எழுதிய 'மனிதன் யார்?' என்ற நூலிலிருந்து

41. இப்படியும் ஓர் அறிமுகம்!

தமிழறிஞர் டாக்டர். அ. சிதம்பரநாதனர் பூவிருந்தவல்லி குருடர் பள்ளிக்கூடத்தில் ஒரு முறை ஆற்றிய சொற்பொழிவிலிருந்து:

''உங்கள் பள்ளிக்கூடத்துத் தலைமை ஆசிரியர் அவர்கள் என்னை இங்கு அழைத்துப் பேசுமாறு வேண்டிக் கொண்டதற்கு முதற்கண் நன்றி தெரிவிக்கிறேன். என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்திய தலைவர் நான் பெரும் பேரறிஞன் எனவும், இதனை இதனைச் செய்து முடித்த-வன் எனவும் கூறிப் பலவாறு புகழ்ந்தார். ஆனல், இப்பொழுது என்னையே நான் அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். நான் நிமிர்ந்து நிற்கிற பொழுது என்னுடைய உயரத்தைக் கணக்கிட்டால் 5 அடி 11 அங்குலம் இருக்கும். என்னுடைய மார்பு சாதாரணமாக மூச்சு விட்டுக்கொண்டு இருக்கிற பொழுது 34 அங்குலம் இருக்கும். வீங்கி மூச்சினை இழுக்கும் பொழுது $36\frac{1}{2}$ அங்குலம் இருக்கும். என் கழுத்தின் சுற்றளவு $15\frac{1}{2}$ அங்குலம். என் உள்ளங்கையைத் தொட்டுப் பார்த்தீர்களேயானல் மிக்க மென்மை உடையதாக இருக்கின்றதைக் காண்பீர்கள். காரணம் கையினலேயே செய்யக்கூடிய கொல்லுத் தொழில், தச்சுத் தொழில் போன்ற தொழில்களைச் செய்யும் பழக்கம் இல்லாமல் இருப்பதும், சோற்றை எடுத்து உண்பதற்கும், நூல்களைப் புரட்டுவதற்குமே அதனை அதிகம் பயன்படுத்தி இருப்பதும் ஆகும். ஆனல், என்னுடைய புறக்கையைத் தொட்டுப் பார்த்தாலோ கடின-மான எலும்புகள் இரும்பு போல் இருப்பதை உணர்வீர்கள். காரணம் கொஞ்சம் கொஞ்சம் உடற்பயிற்சி செய்து உடலை ஓம்பி இருப்பதாகும். எனக்கு மீசையோ, தாடியோ இல்லை. உங்கள் தலையைப் போன்றே என் தலையும் கிராப்பு செய்யப்பட்டுள்ளது ..''

— 'வீட்டுத் திருமகன்' என்ற நூலிலிருந்து

42. கெட்டிக்கார ஆடு

குன்றின் பாதையிலே நடுவில் ஒரு பள்ளம். அக்கம் பக்கத்திலுள்ள பசிய இலைகளை நோக்கிக் கொண்டே செல்லும் ஆடுகள் அதை எவ்வாறு கவனிக்கும்?

எல்லாவற்றுக்கும் முன்னே சென்ற ஆடு, கால் தவறிப் பள்ளத்தில் விழுந்தது. 'இந்தப் பள்ளத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும். நாம் முன்பின் பாராமல் இதில் விழுவதே சரி' என்று நினைத்தன அதன் பின்னே வந்த ஆடுகள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து பள்ளம் நிரம்பிக் கொண்டே வந்தது. கடைசி ஆடு ஓடி வந்தது; ஆனால் பள்ளம் நிறைந்து விட்ட படியால், அது மற்றுமுள்ள ஆடுகளின் மீது விழுந்து புரண்டு கொண்டே, பள்ளத்தைக் கடந்து அப்புறம் சென்றது. பின்னால் திரும்பி மற்ற ஆடுகளை நோக்கி, ''மூடர்களே! வழியிலுள்ள பள்ளங் கூடவா உங்கள் கண்ணில் படவில்லை?'' என்று அது கேட்டது.

— வி.ஸ. காண்டேகரின் 'அரும்பு' என்ற உருவகக் கதைத் தொகுப்பிலிருந்து

43. சிந்தனை மலர்கள்

பெ. தூரனின் 'பட்டிப் பறவைகள்' என்ற நூலிலிருந்து சில சிந்தனை மலர்கள் :

○ "கவிதையே, உன்னை நான் தானே எழுதினேன்" என்று கூறி எழுத்தாணி பெருமையடைகிறது.

○ தாமரை மலரைப் பார்த்துக் காகிதப் பூ சொல்லுகிறது : "நீ நாளைக்கு வாடி விடுவாயே?"

○ குயில் கறுப்பாக இருக்கிறதென்று அதன் பாட்டை வெறுப்பவர்கள் இல்லை.

○ மாம்பழத்தை உண்ணும் போது பலாப் பழத்தை நினைத்துக் கொண்டிருக்கிறவன் இரண்டின் சுவையையும் இழந்து விடுகிறான்.

○ இழிந்த இச்சையை நோக்கி மனம் கேட்கிறது: "திருட்டுத் தனமாக உள்ளே எப்படிப் புகுந்தாய்?"

இச்சை : "நான் திருட்டுத்தனமாக வரவில்லை. நீ எனக்-காகக் கதவைத் திறந்து வைத்த போது தான் உள்ளே வந்தேன்."

○ "தோல்வியே, நீ எங்கே பிறக்கிறாய்?"

"வெற்றி அடைய வேண்டுமென்று உறுதி எங்கு தளர்-கிறதோ அங்கு நான் பிறக்கிறேன்."

○ நண்பா, வாழ்க்கைச் சமுத்திரத்தின் கொந்தளிப்பையும் குமுறலையும் பொருட்படுத்தாது நேராக இந்த ஓடம் செல்லுவதற்கு உனது அன்பின் திறம் என்றும் மாறாமலிருக்கட்டும்.

44. 'துன்பம் தீர்ந்தோம்'

சுந்தரியை அபிமன்யுவுக்குக் கொடுக்க மறுத்து, துரியோதனன் மகன் இலக்கண குமாரனுக்கு மண முடிக்கச் சகல ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. மணமகன் தனது பரிவாரங்களுடன் வந்து விட்டான். மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன. இன்னும் சிறிது நேரத்தில் மணப் பெண்ணை அழைத்துப் போக வந்து விடுவார்கள். இந்த மனமற்ற மணத்திற்காக நடக்கும் மேள தாள ஒலிகளைக் கேட்டுச் சுந்தரி உடல் நடுங்குகிருள்; கண்ணீர் விடுகிருள். இசைக் கருவிகளின் முழக்கம் அவள் இதயத்தில் அடிப்பது போலிருக்கிறது. இந்த நெருக்கடியான நேரத்தில் வழக்கம் போல் சுந்தரிக்கு மலர்கள் கொண்டு வந்த ஒரு பாட்டியின் மூலம் அத்தான் அபிமன்யு வந்து விட்ட சேதி தெரிகிறது. பூச்செண்டுக்குள் காதலன் வைத்தனுப்பிய கணையாழியும் ஓலையும் அவள் கையில் கிடைக்கின்றன. ஆனந்தக் கண்ணீர் வடிக்கிருள் சுந்தரி. முன்பு இதயத்தைத் தாக்கித் துன்பத்தைத் தந்த அதே மேள வாத்ய ஒலிகள் இப்போது அவள் இதயத்தை மகிழ்விக்கின்றன. இந்த நிலையில் சுந்தரி பேசுவதாகச் சங்கரதாஸ் சுவாமிகள் எழுதியுள்ள சுவையான வசனப் பகுதி இது :

'' தோழி ! என்ன அதிசயமடீ ! சற்று நேரத்திற்கு முன் அந்த முட்டாள் இலக்கணனுக்கு நான் மனைவியாகப் போனதை அறிவித்து என் இதயத்தைத் துன்புறுத்திய அதே மேள தாள வாத்ய ஒலிகளெல்லாம் இப்போது எனக்குத் தேறுதல் கூறுவதுபோல் ஒலிக்கின்றனவே ! ....

துந்துபிகளெல்லாம் தும் தும் தும் என்றும், சங்குகளெல்லாம் பம் பம் பம் என்றும், தாள வகைச் சல்லரி மல்லரி கரடிகைகளோ தீம் தீம் தீம் என்றும், முரசு பேரிகை மிருதங்கங்களோ தோம் தோம் தோம் என்றும் தொனிக்கின்றன. ஆகவே இவ்வகை வாத்திய ஒலிகள் எல்லாம் ஒன்றுகூடி தும் பம் தீம் தோம், தும்பம் தீம்தோம், துன்பம் தீந்தோம், துன்பம் தீர்ந்தோம் என்னும் பொருளைக் கொடுக்கலாயின. ஆஹா! நான் செய்த பாக்கியமே பாக்கியம்.''

— டி.கே. சண்முகம் எழுதிய 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்ற நூலிலிருந்து

45. திரு. வி. க.வின் மணிமொழிகள்

○ தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம்; எல்லாம். 'என் கடன் பணி செய்து கிடப்பதே.'

○ ஒரே பிறவியில் மனிதன் எத்தனையோ முறை இறக்கிறான்; எத்தனையோ முறை பிறக்கிறான். இவ்விறப்பும் பிறப்பும் மனிதன் அறிவை விளக்கஞ் செய்தே செல்லும். இது வெறும் பேச்சன்று; கதையன்று; அநுபவம்.

○ ஒருவரது குணம் முதலியவற்றை அறிதற்குரிய கருவிகள் சில உண்டு. அவைகளுள் சிறந்தது அவரது நூல்.

○ வாழ்க்கையைக் குறிக்கொண்டது திருமணம். அத்திருமணத்தை இழப்பது வாழ்க்கைச் செல்வங்களையெல்லாம் இழப்பதாகும். வாழ்க்கையின் நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்தது திருமணம் என்று சுருங்கச் சொல்லலாம்.

○ அன்பு என்ன செய்யாது? அன்பு எல்லாஞ் செய்யும்.

○ வாழ்க்கையின் அடைவு பொருட் பெருக்காயின் என்னுடையது தோல்வி எய்தியதாகும்; தொண்டாயின் அது வெற்றி எய்தியதாகும்.

— **'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்க'ளிலிருந்து**

46. இலக்கிய அனுபவம்

"இலக்கியத்தை நானே ஓதும்போது பெருவிளக்கம் ஒன்றும் நான் பெறுவதில்லை. மாணவரிடையே ஓதும்போது சில இடத்திலே புது விளக்கம் மின்னிப் பொலியும். இலக்கியக் கூட்டுணவின் சிறந்த பயன் இது. தனியே 'அரகர' என்று சொல்லும்போது பெறும் உணர்ச்சியை விடத் திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கீட்டின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கையில் அவர்களோடு சேர்ந்து 'அரகர'என்று சொல்லும்போது நாம் அறியாததொரு மெய்யுணர்வு ஓரிமைப்போதேனும் நம்மைத் தனக்குள் ஆழ்த்தி விடுகிறது. இலக்கிய அனுபவம் எனக்கு வகுப்பிலும், கூட்டங்களிலுமே உண்டாயிற்றெனப் பொதுவாகக் கூறலாம். என்னுடைய அறிவு வளர்ச்சி முழுதும் இத்தகைய கூட்டுறவு வாழ்விடையே தான் மலர்ந்து வருகிறதெனக் காணகிறேன்."

— 'கானல் வரி' என்ற நூலின் முன்னுரையில்
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

47. செட்டிநாட்டுத் தமிழ்

O திரவியம் தேடத் திரைகடலோடுவதைக் 'கொண்டு விக்கப் போவது' என்று செட்டி நாட்டில் கூறுவர்.

O 'பந்தல்' என்னும் சொல், செட்டி நாட்டில் பிணப் பந்தலையே குறிக்கும்; மணப் பந்தலை அன்று. மங்கலச் சொற்களாக, 'கொட்டகை', 'காவணம்' என்பவையே வழங்குகின்றன.

O கூட்டத்தைக் கலைக்கலாம் என்பதற்குக் 'கூட்டத்தைப் பெருக்கலாம்' என்றும், விளக்கை அணை என்று சொல்லுவதற்கு 'விளக்கை மலையேற்று' என்றும் மங்கலச் சொற்களால் தெரிவிப்பது செட்டி நாட்டு மரபு.

O மங்கல நிகழ்ச்சிகளுக்குச் சென்று விடைபெறுவோர், 'போய் வருகிறேன்' என்று கூறுவர்; ஆனால் இழவு வீடுகளினின்றும் விடை பெறுவோர் 'போகிறேன்' என்று மட்டுமே கூறுவதும் செட்டி நாட்டுப் பண்பு.

O செட்டி நாட்டில், 12-30 மணி என்பதை 'அரை மணி' என்று சொல்லுவது வழக்கம்.

O 'பரவாயில்லை' என்று பிறர் சொல்லுவதை, செட்டி நாட்டில் கல்வியறிவில்லாதவரும் கூட, 'குற்றமில்லை' என்று இனிய தமிழில் சொல்லுவர்.

O திருமண வீட்டில் மணமகன் மணகளைக் கை பிடித்த அன்று பெண் வீட்டார் வழங்கும் உணவை 'கை பிடிச் சோறு' என்பர்.

— 'சோமலெ' எழுதிய 'செட்டி நாடும் தமிழும்' என்ற நூலிலிருந்து

48. சில விடுகதைகள்

கொடைக்கானலைச் சார்ந்த மலைப்பகுதிகளில் வாழும் ஆதி-வாசிகளிடையே வழங்கும் சில விடுகதை முத்துக்கள் வருமாறு :

1. காளை படுத்திருக்கு
   கயிறு வீசியிருக்கு ! அது என்ன?

2. தளத்திண்ணைக்கும் வாசற்படிக்கும்
   குன்னு குன்னு நடக்குது. அது என்ன?

3. எங்க வீட்டெருமைக்கு வருசத்துக்-
   கொரு மேச்சல். அது என்ன?

4. ஓடி வருவான் திண்ணப்பன்
   ஒரு காலிலே நிற்பான் பொம்மப்பன்.
   அது என்ன?

5. நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி
   வாயிலே வந்து வானத்திலே போவார்.
   இவர் யார்?

6. செக்கச் சிவந்திருப்பா
   செங்கழனி பூத்திருப்பா
   வாரி முடிஞ்சிருப்பா
   வந்திருப்பா சந்தையிலே! அவள் யார்?

7. முன்னாலே பிறந்து, ரெண்டாவது இறந்து,
   மூன்ருவது பிறந்தா சாகிறதேயில்லை ;
   பிறகு ரெண்டாவது செத்தால்
   பிழைக்கிறதேயில்லை. அது என்ன?

விடைகள்: 1. பூசணி 2. விளக்குமாறு 3. கூரை 4. கதவு 5. நீராவி 6. மிளகாய் 7. பல்.

—செ. அன்னகாமு எழுதியுள்ள 'மேல்மலை மக்கள்' என்னும் நூலிலிருந்து

49. காதலி இரவில் வராததன் காரணம்....?

இரவுக் குறியிடை காதலிக்காகக் காத்திருந்து அவள் வராமற் போகவே வீடு திரும்பி விட்ட காதலன், அவள் வராமைக்கு என்ன காரணம் என அறிந்து வர மறுநாள் அவள் வீடு சென்ருன். அப்போது பலரும் உடனிருந்ததால் அவன் காதலி தான் வராமற் போனதற்கான காரணத்தை மறைமுகமாக அவனுக்கு உணர்த்தினுள்.

''வெட்டினதால் தப்பிவிட்டேன்
வெட்டாட்டால் செத்திருப்பேன்
செத்ததனுல் தப்பிவிட்டேன்
சாகாட்டால் செத்திருப்பேன்
வந்ததனுல் வரவில்லை
வராவிட்டால் வந்திருப்பேன்.''

காதலி மறைமுகமாகக் கூறியதற்குக் காதலன் பின்னர் முயன்று அறிந்து கொண்ட பொருள் இது: 'இரவுக் குறியிடை அவனைச் சந்திக்க அவள் வந்தாள். இருட்டில் வழி புலனுகவில்லை. தவருகக் கிணற்றின் அருகே சென்று விட்டாள். அப்போது மின்னல் வெட்டியது. மின்னல் ஒளியில் கிணற்றில் விழாமல் தப்பித்து விட்டாள். தப்பி வேறு வழியாகச் செல்லும்போது வழியில் கிடந்த ஒரு பாம்பினை மிதித்து விட்டாள். ஆனுல் அது ஏற்கனவே செத்திருந்ததால் அவளைக் கடிக்கவில்லை. அதைக் கடந்து மேலும் செல்லும்போது அவளுக்குப் பூப்பு (மாத விலக்கு) வந்து விட்டது. எனவே காதலனைச் சந்திக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு அவள் வீடு திரும்பி விட்டாள்.'

— ஆறு. இராமநாதன் எழுதிய 'தமிழில் புதிர்கள்-
ஓர் ஆய்வு' என்ற நூலிலிருந்து

50. 'பெண் மொழிகள்'

மலையாளச் சிறுகதைகளிலிருந்து :

O பிள்ளைப் பருவத்தில் பெண் வீட்டுக்கு விளக்கு. ஆனால் கன்னிப் பெண்ணோ தீ. அத் தீ பெற்றவர் மனதை எரிக்கவும் செய்யும்.

O ஒரு பெண்ணின் ரகசியத்தை மற்றொரு பெண் அறிவாள்.

O பெண்கள் எவ்வளவு வேகத்தில் வளர்கிறார்கள்? ஆண் ஆறு ஆண்டுகள் நடக்கின்ற தூரத்தைப் பெண்கள் ஆறே மாதங்களில் தாவுகிறார்கள்.

O பெண்கள் போலி கௌரவத்தின் இருப்பிடம்.

O ஒரு பெண் எதையும் பொறுத்துக் கொள்வாள். அவளால் பொறுக்க முடியாதது ஒன்று உண்டு. அதுதான் மற்றொரு பெண்ணின் அழகு.

O பெண்கள் தங்கள் கணவர்கள் தங்களைச் சந்தேகிக்கிறார்கள் என்று கண்டால் முடிவைப் பற்றி யோசிக்காமல் எதிர்த்து நிற்பர்.

51. புதுமைப்பித்தன் உவமைகள்

O அதற்கப்புறம் மூன்று வருஷங்கள் வெங்காயச் சருகு போல் உதிர்ந்து விட்டன.

O நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபிரான் போல் தலைப்பு வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு கோஷித்துக் கொண்டு வருகிறது. மதராஸ் மெயில்.

O தோற்றுப் போன கட்சியைத் தோற்று விட்டது என்று தெரிந்த பிறகும் வாதிப்பவர் போல், ஒரு பரபரப்புடன் பேசிக் கொண்டே போனார்.

O வாழ்க்கையில் அடிபட்ட சர்ப்பம் போல் அவள் நெஞ்சு துவண்டு நெளிந்து கொண்டிருந்தது.

O தூரத்திலே எட்டாத இலட்சியம் போல நிற்கிறது கைலையங்கிரி.

O விழுந்த காக்கையைச் சுற்றி ஓலமிடும் காக்கை மாதிரிதான் செண்பகராமன் பிள்ளை கத்தினார். அவருக்கு எப்படி உதவி செய்வது என்று புரியவில்லை.

O இடையிடையில் பல் விழுந்த கிழவியின் பொக்கை வாய் மாதிரி இடிந்தும் தகர்ந்தும் சிதறிய வீடுகள்.

O இந்த விஷயத்தைத் தொட்டு விட்டால், முருகதாசர், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்.

— புதுமைப்பித்தன் சிறுகதைகளிலிருந்து

52. 'நல்ல கேள்விகள்'

''உள்ளத்தில் எழும் கேள்விகட்கு, விடை தேடும் முயற்சியில் ஆய்வு தொடங்குகிறது. எனவே நமது ஆய்வின் தரமும், அதன் விளைவின் பயனும் நாம் எழுப்பும் கேள்விகளைப் பொறுத்தது. நல்ல கேள்விகளை எழுப்பினல் தான் நல்ல பதில் கிடைக்கும். பயனற்ற கேள்விகளிலிருந்து பயனுள்ள விளைவுகள் பெரும்பாலும் அமைவதில்லை. வளரும் சமுதாயம், நல்ல கேள்விகளைக் கேட்கும் மனநிலையை முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல கேள்விகளை எழுப்புவதற்கு, சில சூழ்நிலைகளில் ஆழ்ந்த புலமை வேண்டும்; சில சூழ்நிலைகளில் உயர்ந்த நோக்கம் வேண்டும்; சில சமயங்களில், அசாதாரணத் துணிவு வேண்டும்.''

—டாக்டர் வா.செ.குழந்தைசாமியின் 'திருக்குறளின் சிரஞ்சீவித்துவம்' என்னும் கட்டுரையிலிருந்து

53. காண்டேகர் மணிமொழிகள்

O காலதேவன் சிறையதிகாரியைப் போல மிகவும் கடுமை-யானவன். ஆனந்தப் பொழுதை ஒரு கண நேரம் பரிமாறுவதற்குக் கூட அவன் விரும்புவதில்லை.

O ஒவ்வொருவரிடமும் சில இரகசியங்கள் இருக்கத்தான் இருக்கும்!

O இருவர் ஒன்றாக உயிர் வாழ்வதில் மட்டுமின்றி, ஒன்றாக இறப்பதிலும் இன்பம் இருக்கிறது.

O பீரங்கிக் குண்டுகளுக்கு முன்பு ஒருகால் மனிதன் அசையா-மல் நிற்கவும் கூடும். ஆனால் அன்பு கனிந்த சொற்களின் முன்பு அவன் பின்னடையத் தான் வேண்டியிருக்கிறது.

O வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது.

O காதல் என்பது அழகிய கனவல்ல; கண நேரத்து உடலின்-பமும் அல்ல. அது இரண்டு மனங்களின் சேர்க்கை.

O இயற்கையில் உண்டாகும் புயலைவிட, மனத்தில் உண்டா-கும் புயல் மிக விந்தையானது.

O பெண்ணின் இரண்டு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களை விட வலியது.

O மகிழ்ச்சியைப் போலவே துன்பமும் மனிதனை நிரம்பப் பேச வைக்கிறது.

O உலகம் கசப்பான உண்மையை விரும்புவதில்லை. இனிய கனவுகளே அதற்கு வேண்டும்.

— கா. ஸ்ரீ.ஸ்ரீ. தொகுத்துள்ள 'சிந்தனைச் செல்வம்' என்ற நூலிலிருந்து

54. 'எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்'

ஒரு முறை வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) வகுப்பு நடத்திக் கொண்டிருந்த போது ஒரு மாணவர், வகுப்பில் நடக்கும் பாடப் பகுதிகளைக் கவனியாமல் வேறு ஏதோ விஷயத்தில் கவனமாக இருந்தாராம். வி கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அந்த மாணவரை விளித்துப் பின்வருமாறு கூறினாராம்:

''நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்து **எழுவாய்**; நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ **பயனிலை**; இவணிருந்து உன்னாற் **செயப்படுபொருள்** இலை; ஆதலான் வகுப்பினின்றும் வெளியேறுக.''

— ந. சுப்ரமண்யன் எழுதிய 'வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்' என்னும் நூலிலிருந்து

55. அனுதாபம்

மனத்தை மயக்கும் மாலை நேரம். நவநாகரீகமாக உடை அணிந்திருந்த ஒருவன் தன்னையும், தன் அழகையும் கண்டு எத்தனையோ நாரீமணிகள் பெருமூச்சு விடுகிறார்கள் என்று வழி நெடுக உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகளைக் கவனித்துக் கொண்டே சென்றான். அந்தப் பொல்லாத நாரீமணிகளோ அவனைக் கண்டு தாங்கள் பெருமூச்சு விடுவதற்குப் பதிலாகத் தங்களைக் கண்டு அவனையே பெருமூச்சு விடச் செய்தார்கள்.

இந்த லட்சணத்தில் வழியில் கிடந்த ஒரு வாழைப் பழத் தோலை அவன் கவனிக்கவில்லை; அதன் மேல் காலை வைத்து விட்டான்.

அவ்வளவு தான்; 'சரேல்' என்று சருக்கிற்று; 'தொபுகடீர்' என்று கீழே விழுந்தான்.

அடுத்த நிமிஷம் அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது.

''த்சொ, த்சொ, த்சொ! பார்த்து வந்திருக்கக் கூடாதா ஸார்?'' என்றார் ஒருவர்.

''ஏதாவது அடிகிடி பட்டதோ?'' என்றார் ஒருவர்.

கீழே விழுந்தவனுக்கு அவர்களுடைய அனுதாபம் அந்தச் சமயத்தில் ஆறுதல் அளிக்கக் கூடியதாயில்லை. அதற்குப் பதிலாக அது அவமானத்தை அளிப்பதாயிருந்தது. எனவே, 'சட்'டென்று அவன் விழுந்த சுவடு தெரியாமல் எழுந்து மேலே நடந்தான். 'இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்தால் இவர்கள் நம் பல்லையே பிடித்து ஆட்டிப் பார்த்து விடுவார்கள் போலிருக்கிறதே! நல்ல ஜனங்கள், நல்ல அனுதாபம்!' என்று அவனுடைய வாய் முணுமுணுத்தது. அடுத்த கணம் அவனைச் சுற்றிக் கூடியிருந்த கூட்டம் ஒரு 'வந்தன'த்துக்குக் கூட வழியில்லாமல் கலைந்தது.

அவர்கள் அனைவரும் போன பிறகு வாழைப் பழத் தோல் தனக்குத் தானே சொல்லிக் கொண்டது :

''நசுக்கியவனுக்குத் தான் எல்லோரும் அனுதாபப் பட்டார்களே தவிர, நசுக்கப்பட்டவனுக்காக யாரும் அனுதாபப்படவில்லையே!''

— விந்தனின் 'குட்டிக் கதைகள்' என்ற நூலிலிருந்து

56. 'குருவித் தமிழ்'

சிட்டுக் குருவி பற்றிய பாரதியாரின் சொல்லோவியம் இது:

"சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம்."

—'பாரதியார் கட்டுரைக'ளிலிருந்து

57. தவளையின் மௌனம்

பம்பாசரஸில் நீராடி விட்டு வந்த ராமன் தரையில் குத்தி வைத்திருந்த தன் கோதண்டத்தைத் திருப்பி எடுத்தான். அப்பொழுது அதன் நுனியில் சிறிது ரத்தம் படிந்திருந்ததைக் கவனித்தான். ''லக்ஷ்மணா, கோதண்டத்தில் ரத்தம் படிந்திருப்பதற்குக் காரணம் என்ன? கவனித்துப் பார்'' என்றான். லக்ஷ்மணன் சிறிது மண்ணை நீக்கிப் பார்த்த பொழுது கோதண்டத்தால் குத்துண்டு மண்ணினுள் புதைந்து கிடந்த தவளை ஒன்று சாகும் தறுவாயில் இருப்பதைக் கவனித்தான். அப்பொழுது ராமன் ''நான் கோதண்டத்தைக் குத்த வந்த பொழுது நீ கத்தி எச்சரிக்கை செய்திருக்கக் கூடாதா? பாம்பு உன்னைப் பிடிக்க வரும் பொழுது அவ்வளவு ஓலமிடுகின்றாயே. இப்பொழுது ஏன் சும்மாயிருந்து விட்டாய்?'' என்று பரிந்து கேட்டான். தவளை விடை விடுத்தது. ''பாம்பு போன்ற சத்துருக்கள் என்னைத் தாக்க வரும் பொழுது 'ராமா' என்று நான் கத்துவதுண்டு. ஆனால் ராமனே என்னைக் குத்துகிறபொழுது நான் மௌனமுற்றிருப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?''

— 'ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி'
என்னும் நூலிலிருந்து

58. 'பாதி அடிகள் எனக்கு . . .'

முரட்டுப் பையன் ஒருவன் தன்னைக் காட்டிலும் பலவீனனாய் இருந்த ஒரு பையனை அடிக்கத் தொடங்கினான். அப்போது வேறொரு சிறுவன் அந்த வழியாக வந்தான். இவனுக்கும் அந்த முரடனைச் சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பலம் இல்லை. எனினும், முரடன் தன்னைக் காட்டிலும் பலவீனனை அடிக்கிறானே என்று கோபங் கொண்டான்.

பிறகு கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு இந்தச் சிறுவன் முரடனிடம் போய், 'எத்தனை அடிகள் அவனுக்குக் கொடுக்கப் போகிறாய்?' என்று கேட்டான்.

'நீ ஏனடா கேட்கிறாய், பயலே?' என்று முரடன் கூச்சலிட்டான்.

'அவனுக்கு நீ கொடுக்க விரும்பும் அடிகளில் பாதியை எனக்குக் கொடுக்கலாம் என்பதற்காகத் தான் கேட்கிறேன்' என்றான் வந்த சிறுவன் கண்ணீர் பெருக. முரடன் வெட்கமுற்றான்.

இப்படிப் பேசி முரடனின் உள்ளத்தைக் கவர்ந்து சற்று உருகச் செய்த பள்ளிச் சிறுவன் தான் பிற்காலத்தில் இங்கிலாந்தில் பெரிய கவிகளில் ஒருவனான **பைரன்** என்று புகழ் பெற்றவன். அடி பட்ட பள்ளிச் சிறுவனே பின்னாளில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகி விட்ட **ஸர் ராபர்ட் பீல்**.

—**ஆர். லட்சுமி தொகுத்துள்ள 'சிரிப்பே பரிசு' என்ற நூலிலிருந்து**

59. நாட்டுப்புற நம்பிக்கை

O கர்ப்பமான பெண்டிர் ஆண் குழந்தைகளை மடியில் வைத்துக் கொண்டு இருந்தால் பிறப்பது ஆணாக இருக்கும்.

O கர்ப்பமான பெண்கள் இருக்கும் வீட்டில் குளவி கூடு கட்டும்.

O கர்ப்பிணி படுத்து எழுகையில் வலது கை ஊன்றினால் ஆண் குழந்தை பிறக்கும்.

O கர்ப்பிணிகள் எட்டாம் மாதம் தாய் வீடு செல்லக் கூடாது.

O கர்ப்பிணிகளுக்கு வாந்தி அதிகமாக இருந்தால் பெண் பிறக்கும்.

O கர்ப்பிணியாக இறந்த பெண்ணை குழந்தையை எடுக்காமல் புதைத்து விட்டால் நாட்டுக்குக் கொடிய பஞ்சம் வரும்.

O கர்ப்பிணிகள் யாருக்கும் தெரியாமல் எதையும் ரகசியமாகச் சாப்பிடக் கூடாது.

O கர்ப்பிணி ஏழு மாதம் நிறைவதற்கு முன் எந்தக் கிரகணத்தைக் கண்ணால் பார்த்தாலும் வயிற்றுள்ள குழந்தையின் வளர்ச்சி சிதில் அடையும்.

O கர்ப்பிணி வாசற்படியில் தலை வைத்துப் படுக்கக் கூடாது. படுத்தால் பிரசவம் சிரமம் ஆகும்.

O கர்ப்பிணி கண்ணாடியையே பார்த்துக் கொண்டிருந்தால் பெண் குழந்தை பிறக்கும்.

O கர்ப்பிணிகள் விரும்புவதைக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் குழந்தைக்குக் காதில் சீழ் வடியும்.

O கர்ப்பமாக இருக்கையில் பெண்கள் நல்லவற்றை நினைத்தால் குழந்தையும் நற்பண்புடையதாக இருக்கும்.

—தமிழவன் தொகுத்துள்ள 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்னும் நூலிலிருந்து

60. ரூஸ்ஸோவின் சிந்தனைகள்

○ சிந்தனை செய்யத் தொடங்குவதென்பது சுலபமான விஷயமல்ல. ஆனால் ஒருவன் சிந்தனை செய்யத் தொடங்கி விட்டால் அதனை விடவே மாட்டான்.

○ அரசியல் வேறே, ஒழுக்கம் வேறே என்று கருதுகிறவர்கள் இரண்டையும் அறியாதவர்கள்.

○ நம்முடைய சக்திகளுக்கும் ஆவல்களுக்கும் மத்தியில் அதிக வித்தியாசமில்லாமல் கூடிய வரையில் சமன்வயப்படுத்திக் கொண்டு செல்வதிலே தான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது.

○ இளமையின் மீது அன்பு காட்டுங்கள்; அதனுடைய விளையாட்டுக்களில், வேடிக்கைகளில் கலந்து கொள்ளுங்கள். முதுமையடைந்த பிறகு, இந்த இளமையை நீங்கள் அனுபவிக்க முடியாது.

○ குழந்தைகளுக்கு முதன்முதலாகக் கல்வி போதிக்கிறவள் தாய் தான். ஆகையால் அவள் சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவைகளினின்று குழந்தைகளைக் காப்பாற்றி, அவைகளுக்குச் சரியான முறையில் கல்வி போதிக்க வேண்டும்.

○ ஒரு மனிதனைப் பற்றி நீ நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவனுடைய செயலைக் கொண்டு தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

—வெ. சாமிநாத சர்மா எழுதிய
'ரூஸ்ஸோ' என்ற நூலிலிருந்து

61. சில நேரங்களில் சில மாணவர்கள்

இதழியல் (Journalism) தொடர்பான ஒரு வினாப்பட்டியலில் இடம் பெற்றிருந்த சில வினாக்களுக்குக் கல்லூரி மாணவர்கள் அளித்த சில வேடிக்கையான விடைகள் :

1.	பெயர்	—	தேவையில்லை
2.	வயது	—	சின்ன வயது
3.	ஊர்	—	யாதும் ஊரே யாவரும் கேளிர்
4.	சாதி	—	வேண்டாமே ?
5.	மதம்	—	எம்மதமும் சம்மதம்
6.	கொட்டையெழுத்துச் செய்திக்கும் பத்திரிகைச் செய்திக்கும் உள்ள தொடர்பு	—	அம்மாவாசைக்கும் அப்பாவாசைக்கும் உள்ள தொடர்பு
7.	வாசகர் கடிதப் பகுதி	—	வெளியிடுவோரின் மண்டை-யிலோ அல்லது மூளையிலோ அடிக்க வாசகருக்கு ஒரு வரப்பிரசாதம்

— மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை வெளியீடான 'வையை' நான்காம் மலரில் இடம் பெற்றுள்ள ஒரு கட்டுரையிலிருந்து

62. ‘அனற்பிழம்பு’

‘பிரஞ்சுப் புரட்சி’யை (The French Revolution) எழுதிப் புகழ் பெற்ற தாமஸ் கார்லைலின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு கொடுமையான அனுபவம் இது :

கார்லைல் தம் நூலின் முதல் தொகுதியை எழுதி முடித்ததும், அதனைப் படித்துப் பார்த்துக் கருத்துக்கள் கூறுவதற்காக மில் என்பவரிடம் கொடுத்தார். நூலின் கையெழுத்துப் படி - ஒரே படி - ஒரு விபத்தில் சிக்குண்டு எரிந்து போயிற்று. அதையறிந்த கார்லைல் அதிர்ச்சி அடையவில்லை; மனம் தளரவில்லை; மாறாகத் தம் சிந்தையை ஒருமுகப்படுத்தி, நூல் முழுவதையும் மீண்டும் ஒரு முறை எழுதினார். அவ்வாறு எழுதி முடித்த நிலையில் அவர் கூறினார் : ‘‘என் உள்ளத்திலிருந்து நேரடியாக, அனற்பிழம்பு போல் வெளிவந்த நூல் இது!’’

63. ராஜாஜி மணிமொழிகள்

O துக்கப்படுவது எந்தப் பிரச்னையையும் தீர்த்து விடாது.

O லட்சியத்தை சாதிப்பதில் சிரமங்கள் இருக்கலாம். அந்த சிரமம் எதில் இருக்கிறதோ அதை சாதிப்பது தான் உண்மையான சாதனையாகும்.

O ஆசை என்பது பல வேஷங் கொண்டு உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும். ஒரு கோட்டையைக் காப்பது போல் உள்ளத்தைக் காக்க வேண்டும்.

O வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றில் மனத்தைச் செலுத்திக் காலங் கழிக்கப் பயில வேண்டும்.

O நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

O ஒரு விஷயத்தைக் கௌரவித்தாலொழிய அந்த விஷயத்தின் உண்மை புலப்படாது.

O படிப்பையும் பரீட்சையையும் விட மிக அதிகமாகப் பொறுமையைச் சோதிக்கக் கூடியது இல்லற வாழ்க்கை.

O மனம் என்பது ஒரு முக்கியமான விஷயம். வாழ்க்கை முழுவதையும் பாதிக்கும் விஷயம். இருவருடைய வாழ்க்கையும் இன்பகரமாக இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே அதில் இறங்க வேண்டும்.

O தவறைச் சரிப்படுத்திக் கொள்ளப் பிரயாசைப் படுவதால் அவமானம் கிடையாது.

– முல்லை முத்தையா தொகுத்துள்ள 'ராஜாஜி மணிமொழிகள்' என்னும் நூலிலிருந்து

64. அண்டப் புளுகன்

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு ஒரு நாள் ஒரு எண்ணம் தோன்றியது. தமுக்கடி ஆட்களைக் கூப்பிட்டான். "யார் இந்த ஊரிலே அண்டப் புளுகைப் புளுகுகிருனே அவனுக்கு ராஜா ஒரு தங்கப் பழம் தருவார் என்று தமுக்குப் போடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

ஊரெல்லாம் அவர்கள் அப்படியே தமுக்கடித்தார்கள். அரசனது சபைக்கு எத்தனையோ பேர்வழிகள் வந்தார்கள். சன்மானம் தங்களுக்குக் கிடைக்கும் என்று தங்களுக்குத் தெரிந்ததைப் புனைந்து புளுகினர்கள். அரசனுக்கு அவர்கள் கூறியது எதுவும் அண்டப் புளுகாகத் தோன்றவில்லை. அது மெய்யாக இருக்கக் கூடும் என்று அவனுக்குத் தோன்றியது.

அரசனது அமைச்சர்களின் புதல்வர்களும் இவ்வாறு புளுகர்களாக வந்தார்கள. ஒருவருக்கும் அரசன் பரிசளிக்கவில்லை

கடைசியாக ஒரு கிழவன் வந்தான். கையில் சட்டியுடன் வந்து நின்ருன். அவன் ஒரு பிச்சைக்காரன்

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று ராஜா கேட்டான்.

''அரசே! நீங்கள் நீடூழி வாழ்க! நான் தங்களுக்குத் தந்த பணம் எனக்கு வேண்டும். உங்களுக்கு இந்தப் பானை நிறையப் பொற் காசு தந்தேன். அது இப்போதே வேண்டும்'' என்ருன் கிழட்டுப் பிச்சைக்காரன்.

''நீ பொய் சொல்லுகிருய்! நான் உனக்கு ஏதும் தர வேண்டியதில்லை'' என்ருன் அரசன்.

'' நான் சொல்வது பொய்யென்று நீங்கள் நினைத்தால், அந்தத் தங்கப் பழத்தைத் தாருங்கள்'' என்ருன் பிச்சைக்காரன்.

அரசனுக்குப் பிச்சைக்காரனுடைய தந்திரம் புரிந்தது. உடனே தன் பாணியை மாற்றிக் கொண்டு, ''இல்லை! இல்லையப்பா! நீ சொன்னது உண்மை தான்'' என்றான்.

''அப்படி நான் சொன்னது மெய்யென்றால், தாங்கள் எனக்குத் தர வேண்டிய பானை நிறையப் பொற்காசைத் தாருங்கள். இப்போதே அது எனக்கு வேண்டும்'' என்றான் பிச்சைக்காரன்.

மறுமொழி ஏதும் கூறாமல் அரசன் அவனுக்குத் தங்கப் பழத்தைத் தந்து அனுப்பி வைத்தான்.

— ஸி. எஸ். சுப்பிரமணியம் தொகுத்துள்ள
'ஆர்மீனிய நாடோடிக் கதை'களிலிருந்து

65. 'தொழிலாளருக்குச் சொந்தமானவை'

ஓர் அமெரிக்கத் தொழிலாளி ரஷ்யாவுக்குச் சென்ருன். அங்கிருந்த ரஷ்யத் தொழிலாளி தொழிற்சாலே ஒன்றைக் காட்டி, ''இது தொழிலாளரைச் சேர்ந்தது. இந்நாட்டில் எல்லாம் பொது உடைமை'' என்று பெருமையாகச் சொன்னுன். 'அங்கே நிற்கும் ஒரு சில கார்கள் யாருடையன?' என்ற விஞவுக்கு, 'அவை தொழிற்சாலேயை மேற்பார்க்கும் ஒரு சிலரைச் சேர்ந்தவை' என ரஷ்யத் தொழிலாளி விடை பகர்ந்தான். சில வாரங்களுக்குப் பின்னர், அந்த ரஷ்யத் தொழிலாளி அமெரிக்கத் தொழிலாளியின் விருந்தினஞக வந்து, டெட்ராய்ட் நகரில் உள்ள ஒரு தொழிற்சாலேயைப் பார்வையிட்டான். 'இந்தத் தொழிற்சாலே யாருடையது?' என்று ரஷ்யத் தொழிலாளி கேட்டான். ''தொழிற்சாலே முதலாளிகளேச் சேர்ந்தது; ஆனல் தொழிற்சாலேக்கு வெளியே நிற்கும் பல்லாயிரக்கணக்கான கார்கள் தொழிலாளருக்குச் சொந்தமானவை!'' என்று அமெரிக்கத் தொழிலாளி கூறவே, ரஷ்யத் தொழிலாளி வாயடங்கிப் போனுன்.

—சோமலெ எழுதியுள்ள 'அமெரிக்காவைப் பார்!' என்ற நூலிலிருந்து

66. 'பகவத் கீதை'யிலிருந்து . . .

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறுகிறுர் :

O நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.

O எவன் எங்கும் என்னைக் காண்கிறுனே, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறுனே, அவனுக்கு நான் அழிய மாட்டேன்; எனக்கவன் அழிய மாட்டான்.

O எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறுனே, அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.

O சென்றன, நிகழ்வன, வருவன ஆகிய உயிர்களையெல்லாம் நானறிவேன். என்னை அறிந்தோர் எவருமிலர்.

O நான் அனைத்திற்கும் தொடக்கம். என்னிடமிருந்தே எல்லாம் இயலும். இங்ஙனமுணர்ந்த புலவர் என்னை அன்புடன் தொழுவார்.

O மானுடருள்ளே, அவனைக் காட்டிலும் எனக்கினிமை செய்வோன் வேறில்லை. உலகத்தில் அவனைக் காட்டிலும் எனக்கு உகந்தவன் வேறெவனுமாகான்.

68. 'சேமச் செப்பு'

இக்காலத்துத் 'தெர்மாஸ் ஃபிளாஸ்க்' போன்ற ஒரு கருவி சங்க காலத்திலும் இருந்திருக்கின்றது. பழந்தமிழர் பனிக்காலத்தில் அதில் வெந்நீரைச் சேமித்து வைத்தனர். குறுந்தொகை 277-ஆம் பாடல் 'சேமச் செப்பு' என்ற தொடரால் அதனைக் குறிக்கின்றது.

' அற்சிரம் வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே.'

'குளிர்காலத்தில் உண்ணும் பொருட்டு வெந்நீரை ஆருமற் பாதுகாத்து வைத்தற்குரிய செப்பொன்றிருந்தது. அது சேமச் செப்பு என்று சொல்லப்படுகின்றது' என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

68. தாய் தந்தையர் போதித்த நீதிகள்

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய '**என் சுயசரிதை**' என்ற நூலிலிருந்து:

1. என்ன இடுக்கண் நேர்ந்த போதிலும் தைரியத்தைக் கைவிடாதே. தெய்வத்தை நம்பியிரு.

2. எல்லோரையும் சந்தோஷிப்பித்து நீ சந்தோஷமாயிரு.

3. உண்மையே எப்பொழுதும் பேசு. அப்படி பேசுவதனல் யாருக்காவது மன வருத்தம் உண்டாகும் என்று தோன்றினல் மௌனமாயிருந்து விடு.

4. கடுகடுத்துப் பேசாதே. இனிமையாய்ப் பேசு.

5. உனக்கு யாராவது கெடுதி செய்தால் அதைப் பொறுத்துக் கொள். அவர்களுக்கு நீ நன்மை செய்யும்படி முயல்.

6. கோபத்திற்கு இடமே கொடாதே. கோபம் வந்தால் முற்றிலும் அடக்கி விடு.

7. எந்நேரமும் நகை முகத்துடன் இரு.

8. செல்வம் வந்தால் செருக்கடையாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சியடையாதே.

9. மனதினல் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. வாக்கினல் தீமை பேசாதே. செய்கையால் தீங்கு இழைக்காதே.

10. பேராசைப்படாதே. கிடைத்தது போதும் என்று சந்தோஷத்துடன் இரு.

11. வரும்படிக்கு மேல் செலவு செய்யாதே. உன்னல் இயன்ற அளவு தர்மம் செய். ஆடம்பரத்திற்காக ஒன்றும் செய்யாதே.

12. இன்றைக்கு செய்ய வேண்டிய ஒரு வேலையை இன்றைக்கே செய்து முடி. நாளைக்கென்று தள்ளிப் போடாதே.

13. புண்ணியம் செய்; பாவம் செய்யாதே.

14. உன் காலம் வந்தபோது பயமின்றி உன்னைப் படைத்தவர்கள் பாதம் போய்ச் சேர்.

69. ருஷ்யப் பழமொழிகள்

O சொல் அம்பு அல்ல; ஆனல் அதனை ஆளும்போது கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அது சில சமயங்களில் அம்பை விட ஆழமாக ஓர் இதயத்தைப் புண்படுத்த முடியும்.

O நீங்கள் துன்பத்தை அறியவில்லை என்ருல், இன்பத்தையும் அறிய மாட்டீர்கள்.

O சன்னலின் வழியாகவே நீங்கள் எல்லா ஒளியையும் பார்த்து விட முடியாது. கதவைத் திறந்து வெளியே வாருங்கள்; இன்னும் பலவற்றை நீங்கள் காண்பீர்கள்.

O சில சமயங்களில் நீங்கள் கசப்பை விழுங்கி இனிப்பை உமிழ்கிறீர்கள்.

O ஒரு மனிதனின் முகமே அவனது ஆன்மாவின் கண்ணுடி ஆகும்.

—கே. ஏ. அப்பாஸின் 'Face to Face with Khrushchov' என்னும் நூலிலிருந்து

70. தாகூரின் சிந்தனைகள்

இரவீந்திரநாத தாகூரின் '*மின்மினிகள்*' (Fire-Flies) என்ற நூலிலிருந்து :

O எனது இறைவனிடம் நான் அன்பு செலுத்தி வணங்கி நிற்பதற்குக் காரணம், அவரையே நான் 'இல்லை' என்று சொல்லும் அளவிற்கு எனக்கு சுதந்திரம் அளித்திருக்கிறார்.

O எனது அன்பு, பகற்பொழுதிலே தியாகத்திலே ஒன்றி பலம் பெறட்டும்; எனது அன்பு, இரவிலே ஒற்றுமையிலே சாந்தி எய்தட்டும்.

O எனது குறையை அறிந்தும் என்னை நேசித்தவர்களுக்கே, எனது இறுதி வணக்கங்கள்!

O நான் செய்த இந்தக் காகிதப் படகுகள், கால மணிகளின் அலைக்கதிர்களிலே குதித்து விளையாடவே தோன்றியவை; எந்த ஊரையும் போய்ச் சேர வேண்டியவை அல்ல.

O என் குறைகளைக் கண்டு நானே உள்ளூரச் சிரித்துக் கொள்ளும் போது தான், எனது மனச்சுமை குறைகிறது.

O எனது சொல் வலையிலே அகப்படாத அந்த அரிய சிந்தனைகள், எனது பாடல்களிலே புகுந்து கும்மாளியிடுகின்றன.

71. போதுமென்ற மனம்

ஒரு நரி தன்னுடைய நிழலை ஞாயிறு எழுகையில் பார்த்து ''எனக்கு மதிய உணவுக்கு ஓர் ஒட்டகம் கிடைக்கும்'' என்றது. காலை முழுவதும் ஒட்டகங்களுக்காகத் தேடி அலைந்தது. ஆனால் நடுப்பகலில் தன்னுடைய நிழலைப் பார்த்தது. பிறகு ''எனக்கு ஓர் எலியே போதும்'' என்று சொல்லிக் கொண்டது.

—கலீல் கிப்ரானின் 'முன்னோடி' என்னும் நூலிலிருந்து

72. தூய வாழ்வு

O தலை முதல் கால் வரை தங்கமாகவும் வயிரமாகவும் இழைத்தாலும் பயனில்லை. அன்பும், கற்புமே பெண்மைக்கழகு. நகை, தூய ஆடை, மஞ்சளும் குங்குமமும் குலுங்கும் புன்னகை முகம், நல்லொழுக்கம் ஆகிய இவையே பெண்களுக்கு அழகு.

O மனிதனிற் பாதி பெண். பாதியுடலை எப்படி பாதுகாப்போமோ, அப்படியே பெண்ணை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

O இல்லறம் அனுபவச் சாலை; பயிற்சிக் கூடம். அதில் இன்பமும் உண்டு; துன்பமும் உண்டு. இரண்டையும் சமமாகத் தாங்க வேண்டும்.

O நமது வாழ்க்கை ஒரு மணி மலர். அஃது அருள் மணம் பரவுக; இறைவனடி சேர்க! உலகின் துர்நாற்றத்தில் வீழ்ந்து வாடிப் போக வேண்டா!

O பாம்பிற்குப் பல்லில் மட்டும் விஷமுண்டு; பொறாமைக்காரனுக்கு நினைப்பிலும் செயலிலும் சொல்லிலும் மூச்சிலுங் கூட விஷமிருக்கிறது.

O பிறர்க்காக வாழ்வதே இறவாமை; தன்னலச் செருக்கில் வாழ்வதே சாவு.

O மனிதன் என்பது தோலன்று; இரத்தமன்று; தசையன்று. மனிதன் என்பது அறிவு. அவ்வறிவில் தெய்வப் பொருள் விளங்கும்.

— யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் 'திருநூலி'லிருந்து

73. கல்கியின் அறிவுரை

கல்கி, விந்தனுக்கு வழங்கிய அறிவுரை இது :

''எதை எழுதினாலும் அதை நாலு பேர் பாராட்டவாவது வேண்டும்; திட்டவாவது வேண்டும். இரண்டும் இல்லையென்றால் எழுதுவதை விட எழுதாமலே இருந்துவிடலாம்.''

— விந்தனின் 'மிஸ்டர் விக்கிரமாதித்தன் கதைகள்' என்னும் நூலிலிருந்து

74, சிந்திக்க . . .

O ஒழுக்கம் பாராட்டப்படுகிறது பலரால், பின்பற்றப்படு-கிறது சிலரால்.

O துன்பத்திலிருந்து மீளச் சிறந்த வழி அதற்குள் புகுந்து வெளியேறுவது தான்.

O நம்மைப் புகழுபவர்கள் அனைவரும் நம் நண்பர்கள் அல்லர்.

O தீமை வேகமாக வருகிறது, மெதுவாகச் செல்கிறது.

O நல்ல உடை பல தவறுகளை மறைத்து விடுகிறது.

O தவறு செய்த மனச்சான்றிற்கு இலை உதிரும் ஒலி கூட முரசு அதிர்வது போலிருக்கும்.

O எவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்தோம் என்பது முக்கிய-மல்ல; எவ்வளவு நல்ல முறையில் வாழ்ந்தோம் என்பது தான் முக்கியம்.

O கெட்ட செய்திகளுக்கு இறக்கைகள் உண்டு. நல்ல செய்திகளுக்குக் கால்கள் கூடக் கிடையாது.

O கணவன் செவிடாகவும் மனைவி குருடாகவும் இருக்க வேண்டும், வீட்டில் அமைதி இருக்க வேண்டுமானால்.

O பதவியே ஒரு மனிதனை அவன் யார் என்று காட்டுகிறது.

O அறிவாளியாய் இருப்பதை விட மகிழ்ச்சியுள்ளவனாய் இருப்பது மேல்.

— அப்துற்-றஹீம் தொகுத்துள்ள 'படியுங்கள்! சிந்தியுங்கள்!' என்ற நூலிலிருந்து

75. 'கடிகையாரம்'

''கடிகாரம் மூன்று வித ரூபத்தில் இன்று உள்ளது. ஒன்று சுவரில் மாட்டுவது; இரண்டு சங்கிலி அல்லது கயிற்றில் சேர்த்து சட்டைப் பையில் அல்லது மடியில் வைத்துக் கொள்வது; மூன்று முன் கையில் கட்டிக் கொள்வது, இரண்டாவது வகை, பைக்கடிகாரம் என்றும் (ஆங்கிலத்தில்) வழக்குப் பெற்றிருந்தது. காந்தியடிகள் ஒரு கறுப்புக் கயிற்றில் சேர்த்துக் கட்டி மடியில் வைத்திருந்தது மிகவும் பிரசித்தம். கயிற்றை அவர் கழுத்தில் மாட்டியிருந்தார். பண்டை-யரசரும் இவ்வாறு கழுத்தில் கடிகாரம் கட்டியிருந்தார்கள் என்று அறிவது மிக்க வியப்புத் தருவது. உதயணன் கதை (பெருங்கதை) யின் கதாநாயகியான வாசவதத்தையின் தந்தை பிரச்சோதனமன்னன், கழுத்தில் கடிகாரம் கோத்த மாலை அணிந்திருந்தான். அவன் பொய்-கைக் கரைக்கு வந்தபோது, 'கடிகையாரம் கழுத்தில் மின்ன வந்தான்-என்று பெருங்கதை கூறுகிறது. 'நாழிகையைப் புலப்படுத்தும் கருவி' யையுடைய ஆரம்' என்பது ஐயரவர்கள் குறிப்பு. கடிகை—நாழிகை; ஆரம்—மாலை. கடிகையாரமே கடிகாரமாயிற்று என்று கருதலாமல்-லவா?''

— மு. அருணாசலம் எழுதிய 'சொற்சுவை'
என்ற நூலிலிருந்து

76. 'புதிய ஏற்பாட்டி'லிருந்து . . .

இயேசு பெருமான் மலை மீது அமர்ந்து வழங்கிய அருளுரை-களில் சில:

O துயரத்தில் ஆழ்ந்திருக்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்களுக்குக் கடவுளின் ஆறுதல் கிடைக்கும்.

O ஒரு பெண்ணைக் கெட்ட எண்ணத்தோடு பார்க்கிற எவனும் தன் உள்ளத்தில் அவளிடம் கற்பு நெறி தவறி நடந்து கொள்கிறான். நீ பாவக் குழியில் இடறி விழ உன் வலக்கண் காரணமாயிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடு; உன் உடல் முழுவதும் நரகத்தில் எறியப் படுவதை விட, உன் உறுப்புகளுள் ஒன்றை நீ இழப்பதே உனக்கு நலம்.

O இடுக்கான வாயில் வழியாக உட்செல்லுங்கள். அழிவுக்குச் செல்லும் வாயில் அகலமானது; வழி விரிவானது. அந்த வழியாக உட்செல்பவர் பலர். ஏனென்றால், மெய் வாழ்வுக்குச் செல்லும் வாயில் இடுக்கானது; வழி ஒடுக்கமானது. அதைக் கண்டுபிடிப்போரும் சிலரே.

O பிறர் உங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். நீதிச்சட்டம், இறைவாக்குகள் ஆகியவற்றின் செம்-பொருள் இதுவே.

O இரு தலைவர்களுக்கு வேலைக்காரனாயிருக்க எவனாலும் இய-லாது. ஏனென்றால், அவன் ஒருவரைப் பகைத்து மற்றவரிடம் அன்பு கொள்வான்; அல்லது ஒருவரோடு சேர்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பான். உங்களால் ஒரே சமயத்தில் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் வேலை செய்கிறவர்களாயிருக்க இயலாது.

77. சில நேரங்களில் சில பதிப்பகத்தார் . . .

சென்னை 'பாப்பா பதிப்பக'த்தார் 1975-இல் வெளியிட்டுள்ள **'உலகத் திருமணங்கள்'** என்ற நூலில் காணப்படும் பதிப்பு விவரங்கள் இவை :

ஏற்பாட்டினர்	—	காவிரிநாடன் கிருட்டிணவேணி
நிகழ்த்துவோர்	—	பாப்பா பதிப்பகம், சென்னை–600034.
மண விழா ஆண்டு	—	திசம்பர் 1975
மண விழா உரிமை	—	நிகழ்த்தியோர்க்கே
மேடை அலங்கரிப்பு	—	ஓவியர் கங்கன்
அகவரங்கம் அமைப்பு	—	கோப்பாளர் அ. மதுரை
வெளியரங்கம் அமைப்பு	—	என். எஸ். மூர்த்தி
நல்வரவை எதிர்நோக்கும்	—	எழுத்துலகம் அச்சகம், சென்னை - 600034.

78. பெண்களைப் பற்றி . . .

○ பெண்களுக்கு மனம் மெழுகு; ஆண்களுக்கு மனம் பளிங்கு.

— சேக்ஸ்பியர்

○ ஓ, பெண்ணே! நீ காதலிக்கப்படுகிறாய்; ஆனால் கல்யாணம் செய்து கொள்ளப்படுவதில்லை.

— இராபர்ட் ப்ரௌனிங்

○ பெண்கள் பேரீச்சம் பழத்தைப் போன்றவர்கள், கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைக்க வேண்டும். நறுக்கென்று கடித்தால் கொட்டை பல்லை உடைத்து விடும்.

—காண்டேகர்

○ உன் உடைந்த உள்ளத்தைக் கடவுளிடம் கொடு; முழுவதையும் ஒழுங்காக்கிக் கொடுப்பார். உன் முழு உள்ளத்தையும் பெண்ணிடம் கொடு; உடைத்து நொறுக்கி விடுவாள்.

—சிம்சௌவ்

○ மோசமான பெண் மோசமான ஆணை விட மோசமானவளே.

— கதே

○ பெண்களைப் பேச வைப்பதற்கு நம்மிடம் மருந்து இருக்கிறது. அவர்கள் சத்தம் போடாமல் அமைதியாக இருக்க நம்மிடம் மருந்து இல்லை.

— அனடோல் ஃபிரான்சு

○ மனிதனுக்கு மகிழ்ச்சி இரு தடவைகள் வரும். ஒன்று, மனைவியை அடையும் பொழுது; மற்றது, அவளைப் புதைக்கும் பொழுது.

—யாரோ

—தாயம்மாள் அறவாணன் தொகுத்துள்ள
'பெண் மொழி' என்ற நூலிலிருந்து

79. 'விடுதலை!'

1925இல் பெர்னார்ட் ஷாவிற்கு இலக்கியத்திற்கான நோபெல் பரிசு வழங்கப்பட்டது. அப்போதும் வழக்கமான நகைச்சுவை உணர்வோடு ஷா கூறினார்:

''இந்த ஆண்டில் நான் நூல் ஒன்றும் எழுதி வெளியிடவில்லை. உலகம் அதைக் கண்டு விடுதலையுணர்ச்சியோடு மகிழ்ந்து, எனக்கு நன்றி பாராட்டி செய்த செயல் இது.''

— 'அறிஞர் பெர்னார்ட் ஷா' என்ற நூலிலிருந்து

80. 'அவரைக் குறை கூறவில்லையே...?'

இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் அச்சிடப்பட்டு 'அருட்பா' என்ற பெயரால் வெளியிடப்பட்டபோது நீதிமன்றத்தில் அது தவறு என்று வழக்குத் தொடரப்பட்டது. யாழ்ப்பாணத்துப் பெரும்புலவ-ராகிய ஆறுமுக நாவலரும் அவரைச் சார்ந்தவர்களும் வழக்குத் தொடுத்தார்கள். நாயன்மார்களின் தேவாரம் திருவாசகம் ஆகியவை-களே அருட்பா என்னும் பெயர்க்கு உரியவை என்பது ஆறுமுக நாவலரின் கொள்கை. ஆயினும் ஒரு முறை நீதிமன்றத்துக்குள் இராமலிங்க சுவாமிகள் நுழைந்த போது, மற்றவர்களோடு சேர்ந்து ஆறுமுக நாவலரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினாராம். எதிரி-யாகிய அவரை அவ்வாறு எழுந்து நின்று வணங்கியது ஏன் என்று ஆறுமுக நாவலரைச் சிலர் கேட்டார்களாம். ''அவருடைய பாடல்களை அருட்பா அல்ல என்று மறுத்தேனே தவிர, நான் அவரைக் குறை கூறவில்லையே. அவர் உயர்ந்த சான்றோர்; உண்மையான ஒழுக்கத்-தின் திருவுருவம். அதனால் அவரை மதிக்கிறேன், போற்றுகிறேன்'' என்றாராம். அவ்வாறு வாழ்ந்த காலத்திலேயே பலரும் வணங்கிப் போற்றும்படியான தூய வாழ்க்கை நடத்தினார் இராமலிங்க சுவாமிகள்.

81. ஆல்பர்ட் சுவைட்சரின் விருப்பம்

ஆல்பர்ட் சுவைட்சர் எழுதிய எல்லா நூல்களிலிருந்தும் சாரமான சில பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்று, அவையே ஒரு தனி நூலாக வெளியிடப் பெற்றன. பதிப்பாளர் நூலின் முதற்சில படிகளைச் சுவைட்சரின் நெருங்கிய நண்பர்களுக்கு, அவர் நலனில் அக்கறை உள்ளவர்களுக்கும் அனுப்ப விரும்பினர். யார் யாருக்கு அனுப்புவது என்பதைச் சுவைட்சரிடமே எழுதிக் கேட்டார். சுவைட்சர் தம் பதிப்பாளருக்கு எழுதிய மறுமொழி:

"என் நூலின் முதல் நான்கு படிகள் நான் இதுவரை பார்த்தறியாத என் பேரக் குழந்தைகளுக்குச் செல்வதையே நான் விரும்புகிறேன்.''

82. மு. வ. வின் மணிமொழிகள்

O மனம் நிற்க வழி தேட வேண்டா. மனம் உயர வழி தேட வேண்டும்

O அறிவுத் திறன் உடையவர்கள் எந்தச் சிறு வேலையில் ஈடுபட்டாலும் தனிப்பெயர் பெற முடிகிறது.

O இந்த உலகத்தில் பொருள் இல்லாமல் வாழ்ந்தாலும் வாழலாம்; அன்பு செலுத்தும் உயிர் இல்லாமல் வாழக் கூடாது.

O மனப் பொருத்தம் இல்லாத கணவனும் மனைவியும் ஒரு வீட்டில் இருந்து நாள்தோறும் போராடுவதை விட, தனித்தனியே இருந்து உரிமையோடு நாளைக் கழிக்கலாம்.

O உடல் நோயற்றிருப்பது முதல் இன்பம். மனம் கவலையற்றிருப்பது இரண்டாம் இன்பம். உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றும் இன்பம்.

O மனிதன் எதைத் துறந்தாலும் உரிமையைத் துறக்க முடியாது. துறந்தால் மனிதனாக இருக்க முடியாது.

O உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து எழும் கருத்து உலகத்தை மாற்றியமைக்க வல்லது.

O தன்னை எந்நேரமும் புகழ்ந்து பாடுவதை கடவுள் விரும்புவதில்லை; தான் வகுத்த அறநெறியில் வாழந்து மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தித் தொண்டு செய்வதையே அவர் ஏற்றுக்கொள்வார்.

O எந்த வாழ்க்கையிலும், எப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையிலும் குறை ஒன்று இரண்டு இருக்கும்.

—'டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்'
என்னும் நூலிலிருந்து

83. நெஞ்சை அள்ளும் ஒரு நாட்டுப் பாடல்

அன்றாடக் காட்சிகளை அடுக்குச் சொல்லில் அழகு பெறக் காட்டும் ஒரு நாட்டுப்பாடல் இதோ :

''காற்று பசபசங்க — ஆற்றோரம் நான் போக
மழையும் பொசபொசங்குதே — ஆத்தே அம்மாடீ

மழையும் பொசபொசங்க — ஆற்றுக்குள்ளே நான் போக
மீனு கொசகொசங்குதே — ஆத்தே அம்மாடீ

மீனு கொசகொசங்க — மூலை வீட்டுக்கு நான் போக
கௌளி மொணமொணங்குதே — ஆத்தே அம்மாடீ

கௌளி மொணமொணங்க — அடுப்பண்டே நான் போக
சோறு தொளபுளங்குதே — ஆத்தே அம்மாடீ

சோறு தொளபுளங்க — சோடாக் கடைக்கு நான் போக
சோடா லொடாபுடாங்குதே — ஆத்தே அம்மாடீ!''

—கவிஞர் மா. வரதராஜன் தொகுத்துள்ள
'தமிழக நாட்டுப் பாடல்க'ளிலிருந்து

84. ஜெயகாந்தன் முன்னுரைகளிலிருந்து . . .

O உங்கள் கையில் விரிந்து கிடப்பது ஒரு புத்தகமல்ல; எழுதியவனின் இதயம் என்பதை லட்சியப்படுத்தி இதயபூர்வமாய்க் களங்கமற்றுப் படியுங்கள்!

—'பிரம்மோபதேசம்'

O எனது எந்தக் கதையையும் படிப்பதற்கு ஒரு மன முதிர்ச்சி தேவை. அப்படிப்பட்ட முதிர்ச்சி இல்லாதவர்கள் கூட திறந்த மனத்தோடு அவற்றைப் படிப்பதன் மூலம் அந்த முதிர்ச்சியைப் பெறமுடியும்.

—'இறந்த காலங்கள்'

O எனக்குத் தெரிந்த வாழ்க்கைகளை வைத்து மட்டுமே நான் எழுத முடியும். அந்த வாழ்க்கையின் மீது எனக்கு இருக்கும் பிடிப்பின் காரணமாக, பரிவின் காரணமாகவே நான் எழுதுகிறேன்.

—'சுயதரிசனம்'

O வாழ்க்கையைப் பற்றிய எனது விமர்சனமே — வாழ்வின் மகத்துவம் குறித்து அதற்கு நான் தரும் எளிய விருதுகளே — எனது கதைகள்.

— 'உண்மை சுடும்'

O எனது வாழ்க்கையை விட எனக்கு சுவாரஸ்யமான இன்னொரு கதை இல்லை.

—'நினைத்துப் பார்க்கிறேன்'

O எங்கு எதைக் கண்டாலும், யார் எதைச் சொன்னாலும் அதில் எனக்கு ஒரு கதை காத்துக் கொண்டிருக்கும்; என் மனசின் பக்குவம் அப்படி.

—'இனிப்பும் கரிப்பும்'

O தமிழ்ச் சிறுகதை உலகில் இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் உலகின் தரத்துக்கு உகந்த கதைகளை எழுதித் தமிழையும் தங்களையும் உயர்த்திக் கொண்ட ஒரு சில எழுத்தாளர்கள் உண்டு. அவர்களில் நானும் ஒருவன். இந்த உண்மையை யார் சொன்ன போதிலும் அது வெறும் புகழ்ச்சி ஆகிவிடாது இதை நானே சொல்வதனால் தற்புகழ்ச்சியாகி விடக்கூடாது.

—'ஜெயகாந்தன் சிறுகதைகள்'

O ஒவ்வொரு கதையையும் எழுதிய பின் நான் ஒவ்வொரு விதமாய் அதிருப்தியுறுகிறேன். அது நல்லது தான் என்றும் மகிழ்ச்சி-யடைகிறேன் ....

—'யாருக்காக அழுதான்?'

O வாழ்க்கை (Life) என்பது வாழ்வின் (Existence) பிரச்னே; வளர்ச்சி என்பது வாழ்க்கையின் பிரச்னே கலேயும் இலக்கியமும் வளர்ச்சியின் பிரச்னேகள். எனது கதைகள் பொதுவாக, பிரச்னேகளின் பிரச்னே!

—'யுக சந்தி'

O நான் சிறந்த எழுத்தாளனுவது என்னுடைய லட்சியமல்ல. நான் சிறந்த மனிதனுய் இருக்க வேண்டும்.

—'அவர்கள் உள்ளே இருக்கிருர்கள்'

O எனக்குக் கதைகளே அல்ல; கதைக்கு ஆதாரமான வேர்-களும் வித்துக்களுமான—கதைமாந்தர்களேப் பற்றியும், வாழ்க்கைப் பிரச்னேகளேப் பற்றியும் - யோசித்துக் கொண்டிருப்பது மிகுதியும் பயன் தருகிறது.

—'கங்கை எங்கே போகிருள்?'

O மனிதர்களின் பலவீனத்தையே அழுத்தம் தந்து, ஆணி அறைந்து காட்டுவதை நான் எனது நோக்கமாகவோ செயலாகவோ எப்போதும் கொண்டிருந்ததில்லே. எளிமையும் அதே சமயம் உயர்வும் மிகுந்த மனிதப் பண்புகள் என்னே எப்போதும் வசீகரிக்கின்றன.

—'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்'

O நான் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும்போது, நான் எழுதாத எவ்வளவோ பாத்திரங்கள் என்னேடு சேர்ந்து, உங்-களிடமிருந்து விடைபெற்றுக் கொள்வார்கள். இதை நீங்கள் அறிய மாட்டீர்கள் என்பதால் உங்களுக்கு வருத்தம் இல்லே. இதை அறிந்-திருக்கிற நான் இதன் பொருட்டு, சில சமயங்களில் வருந்துவதும் உண்டு.

—'இந்த நேரத்தில் இவள் ....'

85. 'புதிய ஆத்திசூடி'

1. ஐம்பொறி ஆட்சி கொள்
2. கேட்டிலுந் துணிந்து நில்
3. கொடுமையை யெதிர்த்து நில்
4. சிதையா நெஞ்சு கொள்
5. சோதிடந் தனையிகழ்
6. தீயோர்க் கஞ்சேல்
7. தெய்வம் நீயென்றுணர்
8. தையலை உயர்வு செய்
9. பணத்தினைப் பெருக்கு
10. மூப்பினுக் கிடங்கொடேல்
11. யாரையும் மதித்து வாழ்
12. ரௌத்திரம் பழகு

—'பாரதியார் கவிதைக'ளிலிருந்து

86. 'பாவம், பெரிய மனிதர்'

ஒரு நாள் இரவு நமது தீட்சிதர் வீட்டில் ஒரு திருடன் வந்து வாயிலின் ஓர் மூலையிலிருந்த இருட்டறையில் ஒளிந்திருந்தான். இரவு போஜனம் அருந்தி விட்டு, கை கழுவும் படியாக அங்கு வந்த நமது தீட்சிதர் அவனிருப்பதைத் தெரிந்து கொண்டார். அச்சமயம் வீட்டிலிருந்த வேலையாட்களெல்லோரும் கும்பேஸ்வர ஸ்வாமி கோயில் உற்சவம் பார்க்க வெளியிற் போயிருந்தனர். அவரும் அவர் மனைவியும் மாத்திரம் வீட்டிலிருந்த சமயம். உடனே நமது தீட்சிதர் திருடனைக் கண்டு கொள்ளாதவர் போலிருந்து, அங்கு வைத்திருந்த கங்காளத்திலிருந்த ஜலத்தை, சொம்பில் மொண்டு, வாயலம்புவது போல் கொப்பளித்து அறையின் பக்கமிருந்த திருடன் மீது வேகமாய் உமிழ ஆரம்பித்தார். இப்படி சொம்பு சொம்பாக ஜலத்தை மொண்டு அவன் மீது உமிழ்ந்து கொண்டிருக்க, உளவையறியாத அவரது மனைவி, 'இதென்ன இப்படி கங்காளத்திலிருக்கும் ஜலத்தையெல்லாம் வீணுக உமிழ்கிறீரே' என்று, அவரிடம் வந்து வினவ, அவள் மீதும் ஒரு வாய் ஜலத்தை உமிழ்ந்தார். அதன் பேரில் அந்த அம்மாள் ஏதோ தீட்சிதரவர்களுக்குப் பயித்தியம் பிடித்து விட்டது என்றெண்ணி, வெளியிற் போய் கூக்குரலிட, அக்கம் பக்கத்திலிருந்தவர்களெல்லாரும் ஓடி வந்தனர். வந்தவர்கள் மறுபடியும் முன் சொன்னபடியே உமிழ்ந்து கொண்டிருந்த தீட்சிதரைப் பார்த்து, 'இதென்ன பயித்தியம்?' என்று வினவ, நமது தீட்சிதர் அவர்கள், ''வேறொன்றுமில்லை; என் மனைவியின் மனத்தைப் பரீட்சித்துப் பார்த்தேன். பதினாயிரம் ரூபாய் செலவழித்து நான் இவளைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறேன். ஒரு வாய் நீரை உமிழ்ந்தால் இதற்காகக் கோபிக்கலாமா? இதோ பாருங்கள்; இந்த இருட்டறையில் யாரோ பெரிய மனிதர் ஒருவர் வந்திருக்கிருர். அவரை எனக்கு முன்பின் தெரியாது. பாவம், இந்த கங்காளத்திலிருந்த ஜலத்தையெல்லாம் அவர் மேல் நான் உமிழ்ந்தும் அவர் பொறுத்துக் கொண்டிருக்கிருர். இவள் ஒரு வாய் ஜலத்தை பொறுக்கலாகாதா?'' என்று சொல்ல, வந்திருந்தவர்களெல்லாரும் தீட்சிதர் உளவையறிந்தவர்களாய் நகைத்து விட்டு இருட்டறைக்குட் போய், அங்கிருந்த திருடனைப் பிடித்துக் கொண்டு வெளியில் வர, அவனைப் பார்த்து நமது தீட்சிதர், ''கறுப்பு சொக்காய்

போட்டுக் கொண்டிருக்கிறுன் பாவம்! அப்படியே அதெல்லாம் நனைந்து விட்டதே! அப்பா, இனிமேல் இங்கு வருவதானல் சொக்காய் போட்டுக் கொண்டு வராதே! தெரியுமா? ஐயோ—இவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போகும் போது, மகாமஹக் குளத்தின் வழியாகக் கொண்டு போங்கள். அங்கே ஸ்நானம் செய்து விட்டுப் போகட்டும்! பாவம்!'' என்று சொல்லியனுப்பினர்.

—பம்மல் சம்பந்த முதலியார் இயற்றிய
'தீட்சிதர் கதைகள்' என்ற நூலிலிருந்து

87. 'மிகச்சிறந்த கதை'

ஒரு வானொலிப் பேட்டியின் போது கே.ஏ. அப்பாஸ் கூறியது:

"நான் என்னை ஒரு கம்ப்யூடராகவே நினைக்கிறேன். நான் சொல்ல விரும்பும் விஷயத்தை எப்படியும் எல்லோருக்கும் புரியும் வகையில் சொல்லிவிட வேண்டும் என்று துடிக்கிறேன். அத்துடன் என் பணியும் முடிவடைந்து விட்டதாக நினைத்து மகிழ்ச்சி பெறு-கிறேன் . . .

என்னுடைய மிகச் சிறந்த கதை எதுவெனில், அதன் மீது என் பெயர் இருக்கக் கூடாது; அதைப் படித்து விட்டு மக்கள், 'இஃது அப்பாஸின் கதை!' என்று சொல்ல வேண்டும்!"

— கே. ஏ. அப்பாஸின் 'ஏழு இந்தியர்கள்'
என்னும் நூலிலிருந்து

88. 'இவள்தான் வீராங்கனை!'

திருமணம் சம்பந்தமான பேரங்களில் மாப்பிள்ளை வீட்டார் கை தான் ஓங்குவது வழக்கம். ஆனல் ஆந்திராவில் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கோனசீமாவைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் இந்தப் பாச்சா பலிக்கவில்லை.

மாப்பிள்ளைக்கு வேலை இல்லை. ஆனாலும் பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பிடித்தது. மாப்பிள்ளைக்கும் பெண்ணைப் பிடித்தது. ஒரு வீட்டாரையும், மற்ற வீட்டாருக்கு நன்கு பிடித்துப் போய்விட்டது.

இரண்டு தரப்பினரும் உட்கார்ந்து 'லௌகிகம்' பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

மாப்பிள்ளைப் பையனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து விட வேண்டும். ஒரு பெரிய தொகைக்கு ஈட்டு இன்சூரன்ஸ் பாலிசி எடுக்க வேண்டும். கௌரவமான முறையில் திருமணம் செய்து வைக்க வேண்டும். மற்றும் இது, அது . . .

பெண்ணின் தகப்பனாருக்கு வயிற்றைக் கலக்கியது. மாப்பிள்ளை வீட்டாரைச் சற்று இறங்கி வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வாயெடுத்தார்.

அதற்குப் பெண் இடமளிக்கவில்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்த அறைக்குள்ளே சண்டமாருதம் போல நுழைந்தாள்.

"ஐயா, மணமகனாரே, நமக்குத் திருமணமானல் நீங்கள் சமையலையும் பண்ட பாத்திரம் விளக்குவதையும் செய்யத் தயாரா? அப்படியானல் உங்கள் அப்பா போடும் நிபந்தனைகளுக்கெல்லாம் நான் சம்மதிக்கிறேன். அது மட்டுமல்ல, நானே ஒரு வேலைக்குப் போய் உங்களுக்குச் சம்பாதித்துப் போடுகிறேன்."

அவ்வளவு தான், பேச்சு ஏது? மணமகனும் அவன் பெற்றோர்களும் அவர்கள் சார்பாகப் பேச வந்தவர்களும் கம்பி!

— செய்தி : தினமணி, 27.2.1979.

89. மரணம்

"மரணமே!வாழ்வு கடைசியில் உன்னிடம் தான் நிறைவெய்து-கிறது. ஆதலால் என் மரணமே, என்னிடம் வந்து என் செவியில் ரகசியம் பேசுவாய்!

நாள்தோறும் உனக்காகவே காத்து வந்திருக்கிறேன்; உனக்-காகவே வாழ்வின் இன்பங்களையும் வேதனைகளையும் தாங்கி வந்திருக்-கிறேன்.

உன் இதய ரகசியத்தின் ஆழத்தில், என்னிடம் உள்ள யாவும் என் நம்பிக்கை அனைத்தும், என் காதல் அத்தனையும் உன்னையே நாடி ஓடி வந்து கொண்டிருக்கின்றன உன் கண்களின் இறுதிப் பார்வை-யில், என் உயிர் உன்னுள் ஒன்றி உனதேயாகிவிடும்.

பூக்கள் தொடுக்கப் பெற்று மணமகனுக்கு மாலை தயாராக இருக்கிறது. திருமணம் முடிந்ததும் மணப்பெண் தன் இல்லம் துறந்து, தன் நாயகனை இரவின் அமைதியில் சந்திப்பாள்.''

— தாகூரின் 'கீதாஞ்சலி'யிலிருந்து

90. 'ராஜா, நான் போய்வருகிறேன்'

'''இரத்த பாசம்' ஒரு சமுதாய நாடகம். அதில் ஒரு கட்டம். ராஜாவும் ராணியும் சந்திக்கும் காதல் காட்சி. காட்சி முடியும் சமயம் ராணி, 'நான் வருகிறேன்' என்கிருள். மற்ற சமயங்களில் சாதாரணமாக இப்படிச் சொல்வது சபையோருக்குக் கேட்காவிட்டாலும் பாதகமில்லே. ஆனுல், இங்கே அவள், 'வருகிறேன்' என்று சொன்னவுடனே, 'வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிருயே' என்று சுவையோடு சொல்லுகிருன் ராஜா. இப்பொழுது இந்த இடத்தில் 'வருகிறேன்' என்பதை எவ்வளவு அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஒரு நாள் 'இரத்த பாசம்' நாடகத்தில் ராணி வேடம் போட்டவள் மறதியாக 'ராஜா, நான் போய் வருகிறேன்' என்ருள். நான் ராஜாவாக நின்றேன். என்ன சொல்வது? 'நான் வருகிறேன்' என்று சொன்னுல், உடனே, 'வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிருயே' என்று சொல்லலாம். அவள் அவசரத்தில் 'நான் போய் வருகிறேன்' என்ருள். நான் என்ன செய்வது? 'போய் வா' என்று ஆசி கூறி வழியனுப்பினேன்.''

— அவ்வை தி. க. சண்முகம் எழுதியுள்ள 'நாடகக் கலே' என்ற நூலிலிருந்து

91. கலீல் கிப்ரானின் கருத்துக்கள்

O நுமது மிகச் சிறிய செயல் கொண்டு நும்மை அளவிடல் நுரையின் மென்மை கொண்டு பேராழியின் ஆற்றலை அளவிடுதலாகுக.

O நட்பில் மட்டும் வேறெந்த நோக்கமும் இருத்தல் வேண்டா, உணர்ச்சி ஆழ்ந்து வளர்வதென்பதல்லாது.

O அன்பு உடைமை கொள்வதுமில்லை; தான் உடைமையா-வதுமில்லை. அன்பே அன்புக்கு முழு நிறைவு.

O துயரமும் களிப்பும் ஒன்ருய் வருகின்றன. ஒன்று நம்முடன் விருந்தறையுள் அமர்ந்திருக்கையில், மற்றது படுக்கையறையில் துயின்று கொண்டிருக்கின்றது.

O ஒழுக்கத்தினும் உயர்ந்த உடையும் உண்டோ? உண்டென ஒருவன் கருதுவாளுகில் அவனுக்கு நிர்வாணமே சாலவும் நன்று.

O நுமது உடைமை எல்லாம் கொடுத்த போதும் நீவிர் கொடுப்பது குறைவே. நீவிர் நும்மையே கொடுக்கையில் தான் உண்மையிலேயே கொடுக்கின்றீர்.

O நீவிர் உழைக்குங்கால் ஒரு தீங்குழல் போன்ருகின்றீர்; அந்தக் குழலூடே பொழுதின் உயிர்ப்பு நுழைந்து இன்னிசையாய் மாறுகின்றது.

O நுமது ஆடைகள் நும் அழகின் பெரும்பகுதியை மறைக்-கின்றன; ஆயினும் அழகில்லாதவற்றை மறைப்பதாயில்லை.

O அல்லலுற்ற போதும் தேவைகள் எழுந்த போதும் நீவிர் இறைவனை வேண்டுகின்றீர். நும் மகிழ்ச்சிப் பெருக்கிலும், நிறை செல்வ வாழ்விலும் அங்ஙனமே வேண்டலாகாதா?

O நுமது துன்பம் பெரும்பாலும் நீவிரே தேடிக் கொண்டது. அது நும் உள்ளிருக்கும் மருத்துவன்; நுமது ஆன்மாவைக் குணம் செய்யுமோர் மருந்துமாகும்.

— கலீல் கிப்ரானின் 'தீர்க்கதரிசி'
என்ற நூலிலிருந்து

92. 'ஒன்னரையணு மதிப்பு'

ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொன்ன ஒரு கதை:

ஒரு யோகி தன் குருவிடம் சென்று, ''நான் பதினுன்கு வருஷங்கள் காட்டில் தனியாக இருந்து தவம் செய்து நீரின் மேல் நடக்கும் சித்தியை அடைந்திருக்கிறேன்'' என்ருனும். அதைக் கேட்ட குருவானவர் அவனைப் பார்த்து, ''மகனே! ஏன் இவ்வளவு வருத்தப்பட்டாய்? பதினுன்கு வருஷங்களையும் வீணுக்கினுயே. ஒன்னரையணு கொடுத்தால் ஓடக்காரன் உன்னை நீரின் மேல் கொண்டு போய் அக்கரை சேர்ப்பானே. நீ அடைந்த சித்தி ஒன்னரையணு மதிப்புத் தான்'' என்ருர்.

— ராஜாஜி எழுதிய 'ராமகிருஷ்ண உபநிஷதம்'
என்ற நூலிலிருந்து

93. 'பஜ கோவிந்த'த்திலிருந்து . . .

ஸ்ரீ சங்கரரின் 'பஜ கோவிந்த'த்தில் இடம் பெற்றுள்ள பாடல்கள் இவை :

○ துறவு மார்க்கமே மார்க்கம்
உறவும் பணமும் வயதும் நம்பி
வேண்டாம் ஆங்காரம் போங்காலம் வந்தால்
சடக்கென்று மறையும் மகனே
நொடிப் பொழுதில் எல்லாம்.

○ யோகத்திலிருப்பினும் ஒரு சுக வேகத்திலிருப்பினும்
கூட்டத்திலிருப்பினும் தனியிடத்திலிருப்பினும்
அகிலம் கடந்த மெய்ப்பொருளில் கலந்து
மகிழும் மகிழ்ச்சியே அளவிலா மகிழ்ச்சி.

○ வியர்த்தம் பணம் பணமென்றலைவது
அர்த்தம் என்பது அனர்த்தமே காண்
எள்ளளவும் சுகமில்லை பணம் சேர்த்த பாவிக்கு
கள்ளனை மட்டுமல்ல பெற்ற மகனையு மஞ்சுவான்
சந்தேகமில்லை உண்மை இது யறிவாய்
எந்த ஊரிலுமிது பணத்தின் கதியாகும்.

○ முதுமை மேலிட மாயும் காம விகாரம்;
வற்றிய நீர் நிலை இருந்தவிடம் காணுது;
செல்வம் சுருங்கியதும் சூழ்ந்த சுற்றம் எங்கே?
ஞானம் பெற்றதும் ஓயும் மாய மெல்லால்.

94. 'கருவுற்ருர், குழந்தை தான் பெறவில்லை!'

ஆங்கிலப் பேரறிஞர் அடிசன் என்பார் ஆங்கில நாட்டில் கி. பி. 18-ஆம் நூற்ருண்டில் தலைசிறந்து விளங்கிய எழுத்தாளர். அவர் ஒருமுறை பேச எழுந்து, ''நான் நினைக்கிறேன், நினைக்கிறேன், நினைக்கிறேன்'' மூன்று முறை சொல்லிவிட்டு, மேலும் பேச முடியாமல் உட்கார்ந்து விட்டாராம். அவர் ஆங்கிலத்தில் ''I conceive, conceive, conceive'' என்ருராம். 'கன்சீவ்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'நினைக்கிறேன்' என்பது ஒரு பொருள்; 'கருவுற்றிருக்கிறேன்' என்பது மற்ரெரு பொருள். அருகிலிருந்தவர், அறிஞர் அடிசன் அமர்ந்து விட்டதும் எழுந்து நின்று, ''திருவாளர் அடிசன் மூன்று முறை கருவுற்ருர்; குழந்தைதான் பெறவில்லை'' என்று நகைச்சுவை தோன்றக் கூறிஞராம்.

—அ. கி. பரந்தாமனுர் எழுதிய 'பேச்சாளராக'
என்னும் நூலிலிருந்து

95. நகைத்தல் நல்லது

○ வாழ்க்கையானது, வெறும் வறண்ட பாலைவனமாக இருக்கக் கூடாதென்பதற்காகத் தான், துன்பமும் துயரமுமே மிகுதியாகவுள்ள புதர்க்காடாகி விடக் கூடாதென்பதற்காகத் தான், ஆண்டவன், சிரிப்பென்னும் பசும்புற்றரையைப் படைத்திருக்கிறான். இந்த ஒன்றை மட்டும் படைக்க மறந்து விட்டு, மற்ற எல்லாவற்றையும் படைத்திருந்தாலும், அவனுடைய படைப்புத் தொழில் முற்றுப் பெற்றதாகக் கருதப்பட மாட்டாது.

○ சாதாரணமாக எல்லோரும் சிரிக்கலாம். எல்லோராலும் பிறரைச் சிரிக்க வைக்க முடியாது. அதிலும், தான் சிரிக்காமல் மற்றவர்களைச் சிரிக்க வைப்பது கொஞ்சம் கடினம். ஆனால் அதில் தான் உண்மையான நகைச்சுவையைக் காண முடியும்.

○ நல்லவர்கள் பரிச்சயத்தைப் பெற வேண்டுமென்றும், நான்கு பேர் மத்தியிலே பழகிப் பெரிய மனிதனாக வேண்டுமென்றும் ஆசைப்படுகிறீர்களா? உங்கள் முகம் எப்பொழுதும் சிரித்த முகமாயிருக்கட்டும்.

○ நகைச்சுவையில்லாத மனிதன், மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படாதவனாயிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவனுக்கே அவன் பயனுள்ளவனாயிருப்பானா என்பது சந்தேகம். அதாவது, அவனுக்கே அவனுடைய நல்வழி இன்னதென்று புலப்படாது. ஏனென்றால் அவனுக்கு உலகம், இருள் மயமாகவே தோன்றும். அவனுக்கு எதிலும் ருசியிராது; யாரிடத்திலும் நம்பிக்கையிராது.

○ பொதுவாகவே, அறிவைத் துலக்கப்படுத்திக் கொள்ள, ஆன்மாவை உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்ள, உடம்பில் வியாதிகள் வராமல் தடுத்துக் கொள்ள நகைத்தல் நல்லது.

— *வெ. சாமிநாத சர்மா எழுதிய 'நகைத்தல் நல்லது' என்னும் நூலிலிருந்து*

96. வளையம்

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான் :

''தாயே, சாவு என்பது என்ன?''

தாய் சொன்னாள் :

''வாழ்வின் முடிவு.''

மகன் கேட்டான் :

'' வாழ்வு என்பது என்ன?''

தாய் சொன்னாள் :

''சாவின் தொடக்கம்.''

—கண்ணதாசனின் 'குட்டிக் கதைகள்'
என்னும் நூலிலிருந்து

97. 'ஏனழுதாய், சொல்லியழு'

'ஆரடித்தார் ஏனழுதாய், அடித்தாரைச் சொல்லியழு!' என்ற தாயின் கேள்விக்குப் பிறர் கூறும் பதில்களாகத் தாலாட்டுப் பாடல்களில் காணப்படும் பகுதிகள் சுவையாகவும் நயமாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டு இதோ:

'ஆரும் அடிக்கவில்லை
    ஐவிரலும் தீண்டவில்லை;
தானு அழுகின்றான்
    தம்பிதுணை வேணுமென்று!
அவனு அழுகின்றான்
    ஆத்தாள் மடிதேடி!'

(பாண்டிய நாட்டுத் தாலாட்டு)

'ஆரும் அடிக்கவில்லை
    அங்கொருவர் தொடவுமில்லை;
தம்பியவன் தானேயழுகிறானும்
    தன்னைப்பெற்ற தாயார் மடிதேடி!
தாலாட்டும் கேளானும்
    தாயின்முலைப் பாலையெண்ணி!'

(ஈழ நாட்டுத் தாலாட்டு)

—தமிழண்ணல் தொகுத்துள்ள 'தாலாட்டு'
என்னும் நூலிலிருந்து

98. ,சில சொற்சித்திரங்கள்

O ஓலைக் கீற்றுக்களின் ஊடே நிலவு அக்குடிசைக்குள்ளில் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

O அங்கு பகலிலும் வெளிச்சத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுக் குடியிருக்கும் இருள்.

O இளமையின் கதவருகில் நாணத்துடன் நிற்கின்ற அவள் ஓர் உயிருள்ள கேள்விக் குறியாக அவனை (தந்தையை) உற்று நோக்கினாள்.

O சுவர் மீது ரூபாய் நாணயங்களைப் போன்ற ஒளி வட்டங்களைப் பார்த்தவாறு அவன் உட்கார்ந்திருப்பான்.

O உண்மையும் நடைமுறையும் பரஸ்பரம் விழுங்கி முடிக்கக் காத்து நிற்கும் ஊமையானதொரு அமைதி அங்கே நிலவியது.

O முடிவில்லாத காலம் மனிதர்களின் ஆசைகளையும் கனவுகளையும் மிதித்து நசுக்கி வாழ்க்கையைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தது.

O முற்றத்தில் நிழல்கள் சித்திரம் வரைந்து கொண்டிருந்தன.

O சாதாரண உயரம். பருத்த உடலுமல்ல, ஆனால் அவள் ஒல்லியானவளும் அல்ல. குருவியை நினைவூட்டும் உடல் அமைப்பு கொய்யாப் பழத்தைப் போன்ற முகம்.

O கொச்சுநாணி உடல் மெலிந்தாள். பழைய கொச்சுநாணியின் நிழல் மட்டுமே இப்போது இருந்தது.

O தானே சகலதும் என்ற எண்ணத்தில் பகல் முழுவதும் ஆட்டி வைத்த உலகம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. மரியம் இன்னும் உறங்கவில்லை.

O எதிரே வயல்கள். அதன் முதுகெலும்பு போல் நீண்டு கிடந்த வரப்பின் வழியாகப் போகும் போது ஒரு கணம் அவன் யோசித்தான்.

— *மலையாளச் சிறுகதைகளிலிருந்து*

99. ஜெயகாந்தன் சிந்தனைகள்

○ மகான்கள் நம்மோடு வாழ்தல் நாம் செய்த பேறு; அவர்கள் நம்மை விட்டு நீங்குதல் அவர்கள் செய்த பேறு.

○ எதையும் எவரும் தவருகப் புரிந்து கொண்டும் விடலாம்; தவருக ஆக்கியும் விடலாம்.

○ ஆயிரம் நூல்களிலிருந்து பெற முடியாத ஞானங்களை ஓர் அனுபவம் உணர்த்தும்.

○ ஒருவர் 'நாஸ்திக'ராக இருப்பதும் ஆண்டவனின் சித்தமல்லால் வேறென்ன?

○ இலக்கியத்திற்குச் சம்பந்தமில்லாத விஷயமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை.

○ ஒரு சிருஷ்டிகர்த்தா வாழ்க்கையின் எவ்வளவு மோசமான பாதிப்பிலும் கூட ஓர் அருமையான அனுபவத்தைப் பெற முடியும்.

○ ஓர் ஆணை விட ஒரு பெண்ணுக்கு ஆடைகளும் ஆபரணங்களும் அணிகலன்களும் எவ்வளவு அதிகமோ அவ்வளவு அதிகமாக அவள் மீது விலங்குகளும் கட்டுகளும் சுமைகளும் சுமத்தப்படுகின்றன.

○ ஒவ்வொருவர் மரணத்திலும் ஒவ்வொருவனும் தன்னுடைய மரணத்தையே கண்டு அழுகிருன்.

○ எல்லா விஷயங்களிலும் ஏதோ ஒரு மகத்துவம் நமக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கிறது.

—'ஜெயகாந்தன் சிந்தனைகள்' என்னும் நூலிலிருந்து

100. 'குழந்தை மொழிகள்'

O தீன்மான உணர்ச்சியில் குழந்தைகளை யாரும் வெல்ல முடியாது. உலகமே தலைகீழ் ஆனாலும், குழந்தைகள் ஒருவருக்குப் பணிந்து போவதில்லை.

O குழந்தை வளர்ப்புக்கு முதலில் வேண்டியது பெற்றோர்களின் தோல்வி தான், அதில் தான் உண்மையான இன்பம் இருக்கிறது. அப்போது தான் சிறு கை அளாவிய கூழிலும் மழலைச் சொல்லிலும் அமிழ்தத்தையும் இன்னிசையையும் அனுபவிக்க முடியும்.

O நம் ஆசைகளைக் குழந்தையின் மேல் திணிப்பது அநாகரிகம். குழந்தையின் நல்ல ஆசைகள் நிறைவேறும்படி, நாம் சிறிது துன்பப்பட்டாவது வளர்ப்பது தான் நாகரிகம் மனிதன் செடி கொடிகளை உரிமை கொடுத்து வளர்க்கிறான். ஆனால் குழந்தைகளை அவ்வாறு வளர்க்கக் கற்றுக் கொள்ளவில்லை.

O பரபரப்பும் வீணான கடமை நெருக்கடியும் மிகுந்த இன்றைய நாகரிக வாழ்க்கையில் குழந்தைகளைப் பெறுகிறார்கள்; குழந்தையின்பத்தைப் பெறுவதில்லை.

O குழந்தைகள், நாம் சொல்லிக் கற்பது குறைவு; மிகக் குறைவு. நாம் செய்வதைப் பார்த்துக் கற்பது தான் மிகுதி. அதனால் நாம் நடந்து வழி காட்ட வேண்டும்.

O குழந்தைகளின் வாழ்வில் ஒரு முறை ஒரு வழக்கம் ஏற்பட்டு விட்டால் அதுவே சட்டம் போல் ஆகிறது. பிறகு அதை மாற்றிக் கொண்டு வாழ முடியவில்லை.

O குழந்தை மனம் மலரை விட மென்மையானது. அதைக் கசக்கிப் பாழாக்கக் கூடாது. இயல்பாக வளருமாறு விட வேண்டும்.

O குழந்தைகளின் மனத்தில் குறைகள் வேரூன்றி விட்டால் அவை வளர்ந்த பிறகும் நீங்குவதில்லை.

O குழந்தை வளர்ப்பு என்பது சிறந்த அறத் தொண்டு என்று உணர வேண்டும். குழந்தையை அணுகும் போது பொறுமையும் அமைதியும் மனத்தில் நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும்.

— டாக்டர் மு. வ. எழுதியுள்ள 'குழந்தை' என்ற நூலிலிருந்து

பெயர் நிரல்

அகிலன், 15
அடிசன், 97
அப்துல் ரகுமான், 35
அப்துற்—றஹீம், 24, 75
அப்பாஸ், கே. ஏ. 70,90
அருணசலம், மு., 76
அலெக்சாந்தர், 16
அனடோல் ஃபிரான்சு, 79
அன்னகாமு, செ., 48
ஆல்பர்ட் சுவைட்சர், 4,82
ஆல்ஜெர், 32
ஆறுமுக நாவலர், 81
இயேசு பெருமான், 77
இரவீந்திரநாத தாகூர், 19,71,92
இராபர்ட் ப்ரௌனிங், 79
இராம சுப்பிரமணியன், கி., 7
இராமநாதன், ஆறு., 49
இராமலிங்க சுவாமிகள், 81
ஐவான் கிரைலோவ், 22
ஃபிராங்க்லின், 32
கங்கன், 78
கண்ணதாசன், 99
கதே, 32,79
கபீர் தாஸர், 36
கல்கி, 20,74
கலீல் கிப்ரான், 72,94
காண்டேகர், வி.ஸ., 13,42,53,79
காத்யாயனி, 5
காந்திஜி, 10,38,76
காவிரிநாடன், 78
கா. ஸ்ரீ. ஸ்ரீ., 13,53
கிருட்டிண வேணி, 78
கிருஷ்ணன், என். எஸ்., 20
கி வா. ஜ.,7
குருநானக், 6
குழந்தைசாமி, வா. செ., 52
கோவிந்தன், வை., 33
சங்கரதாஸ் சுவாமிகள், 44
சண்முகம், அவ்வை தி. க., 12, 44,93
சபாபதி முதலியார், 11
சரோஜினி தேவி, 10
சாமிநாத சர்மா, வெ., 40,60,98
சாமிநாதையர், உ. வே., 68
சிதம்பரநாதனர், அ., 41
சிம்சௌவ், 79
சின்ன அண்ணமலை, 38
சுப்பிரமணியன், ஸி. எஸ்., 65
சுப்பிரமணியன், ச. வே., 17
சுப்ரமண்யன். ந., 54
சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கோ., 54
சேக்ஸ்பியர், 79
சோமலெ, 47, 66
தமிழண்ணல், 100
தமிழவன், 59
தாமஸ் கார்லைல், 62
தாமோதரம் பிள்ளை, சி. வை., 18
தாயம்மாள் அறவாணன், 79
திருகூடசுந்தரம், பொ., 23
திரு. வி. க., 15, 45
துளசி ஜெயராமன், 10
தூரன். பெ., 43
பம்மல் சம்பந்த முதலியார், 11, 69, 89
பரந்தாமனர், அ. கி., 97
பாரதியார், 2, 31, 56, 87
புதுமைப்பித்தன், 8, 51
புளுடார்க், 32
பெர்னர்ட் ஷா, 80
பைரன், 58
மதிவாணன், இரா., 25
மதுரை, அ., 78

மார்க்கஸ் அரேலியஸ், 23
மில், 62
மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., 46
மு. வ., 15, 26, 83, 103
முல்லை முத்தையா, 63
மூர்த்தி, என். எஸ்., 78
மெகாலே, 32
மைத்திரேயி, 5
மௌலானா ஜாமி, 24
யாக்ஞுவல்கியர், 5
ரகுநாதன், 8
ரணஜித் தேசாய், 13
ராபர்ட் கோலியர், 32
ராமஸ்வாமி, ப., 3, 22, 32
ராஜநாராயணன், கி., 1, 29
ராஜாஜி, 5, 38, 63, 95
ரூஸ்ஸோ, 60
ரோஜா முத்தையா, 34
லட்சுமி, ஆர்., 58
வரதராஜன், மா., 84
வள்ளியப்பா, அழ., 9
வ. வே. சு. ஐயர், 31
விக்கிரமாதித்தன், 74
விசுவநாதம், கி. ஆ. பெ., 14, 39
விசுவநாதன், ஈ. ச., 26
விந்தன், 37, 55, 74
வினோபா, 16
வெர்னர் பிஷ்ட், 4
ஸர் ராபர்ட் பீல், 58
ஸிஸரோ, 32
ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர், 31
ஜெயகாந்தன், 85, 102
ஜோசப், 4
ஸ்ரீ கிருஷ்ண பகவான், 67
ஸ்ரீ சங்கரர், 96
ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், 73
ஸ்ரீ ராமகிருஷ்ணர், 27, 57, 95

ஆசிரியரின் நூல்களைப் பற்றிய சில மதிப்புரைகள்

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்

○ 'மு.வ. வின் நாவல்களைப் பொறுப்போடு படிக்க விரும்பும் ஒரு வாசகனுக்கு இந்நூல் ஓர் ஆற்றுப்படை; வழிகாட்டி; பயனுள்ள குறிப்பேடு.'

—கண்ணதாசன்

○ 'ஒரு நாவலாசிரியரின் படைப்புக்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்த முதல் நூல் என்னும் பெருமைக்கு உரியது.'

— நூலகம்

○ 'The author has presented his analytical studies in lucid and unbiased manner. He deserves a warm welcome.'

– **The Indian Express**

○ 'Ira. Mohan has ventured to take the first step in this field.'

--**The Mail**

2. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்

'காலம் சென்ற பெரிய எழுத்தாளர் ஒருவரது படைப்புக்களை நம்மிடையே வாழும் எழுத்தாளர் ஒருவர் ஆர்வத்தோடு ஆராய்ந்து, அடுத்தது காட்டும் பளிங்கு போல, மூல நூல்களின் பல்வேறு அமைப்புக்களை வாசகருக்குத் தெளிவாகக் காட்டுகிறார். இது ஒரு நல்ல புதிய முயற்சியாகும்.'

—தினமணி சுடர்

○ 'This is a novel attempt, since no one has so far attempted to compile a thesaurus for a single Tamil author's works'.

—The Hindu

3. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்

○ 'They (Dr. Varadarajan's sayings) are not only his cream of thought but also serve as a guidance or introduction to his works.'

—The Hindu

○ 'இத்தொகுப்பு இன்றைய இளைஞர்களுக்கு மிகவும் பயன் தரக் கூடியது.'

—தினமணி சுடர்

4. யான் கண்ட மு.வ.

○ 'The author of this book who had close acquaintance with Mu. Va...narrates all that he could gather from him. This is a book quite useful to students.'

—The Hindu

○ 'The book is a valuable addition to biographical literature in Tamil.'

—The Mail

○ 'டாக்டர் மு. வரதராசனுருடன் சில காலம் பழகியும், அவர் இயற்றியுள்ள நூல்களைப் பல்கால் படித்தும் தாம் அறிந்த அரும்பெரும் கருத்துக்களைப் பன்னிரு தலைப்புக்களில் இப்புத்தக ஆசிரியர் திரட்டித் தந்துள்ளார். . . . ஒரு நல்ல படைப்பாகத் திகழ்கிறது.'

— தினமணி சுடர்

5. கு. ப. ராஜகோபாலன் சிறுகதைகள்

O 'The book is not a mere appreciation of the great writer, but a fine analytical study of his writings.'

—**Indian Express**

O 'நவீன இலக்கிய அமைப்பைப் பயில்வோருக்கு இந்நூல் பேருதவியாக இருக்கும். சிறுகதை எழுதும் ஆற்றலைத் தருவது என்னல் மிகையாகாது.'

— தினமணி சுடர்

○ 'பல திறனாய்வு நூல்களை வெளியிட்ட டாக்டர் இரா. மோகன் அவர்களின் திறனாய்வுத் திறனை இந்நூல் முழுமையிலும் காண முடிகின்றது. . . . சிறுகதைப் பண்புகளை அறிதற்கும் கு. ப. ரா. வின் சிறுகதைத் திறனை உணர்தற்கும் இந்நூல் ஒரு நல்ல துணை.'

— கலைக்கதிர்

○ 'சிறுகதைகளில் என்ன இருக்கிறது?' என்று அலட்சியமாகக்கேள்வி கேட்பவர்களுக்குத் தக்க விடை அளிப்பது போல் அமைந்திருக்கிறது இந்த ஆய்வு நூல்.'

—அகிலன்

6. டாக்டர் மு. வ. வின் கடிதங்கள்

(இணையாசிரியர் : டாக்டர் முத்துச்சண்முகனார்)

○ 'இக் கடிதங்கள் மு. வ. அவர்களின் ஆளுமைப் பண்பையும் அன்பையும் ஆர்வத்தையும் எளிமையையும் இனிமையையும் உயிரோட்டமுள்ள எழுத்தோட்டத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. ஆசிரியர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.'

—கலைக்கதிர்

7. ஜெயகாந்தன் சிந்தனைகள்

○ 'இந்நூல் தொகுப்புத் திறத்தாலும் பகுப்பு முறையாலும் பயனுள்ளதாக இலங்குகிறது.'

—தமிழண்ணல்